விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 73 | வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 12 வெள்ளிக்கிழமை (28.09.2012) | பக்கங்கள்: பதினாறு

# ஆறு மாதங்களுக்குள் கூட்டமைப்பு தன் எதிர்ப்பை வெளியிட வேண்டும்

## அமைச்சர் ராஜித சொல்கிறார்

(கொழும்பு)

"பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக ஆறு மாதங்களுக்குள் தீர்வுத்திட்ட அறிக்கை வெளியிடப்பட வேண்டும். இல்லையேல் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட முடியும். தமது பக்க நியாயத்தை வெளிப்படுத்தவும் முடியும்" என்று மீன்பிடித்துறை மற்றும் நீரியல் வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் மற்றும் தேசியப் பிரச்சினை, தீர்வுத்திட்ட விவகாரம் குறித்து விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆளும் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறவேண்டும் என்று பரவலாக கோரப்பட்டுவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ளவேண்டும் என்று நானும் அழைப்பு விடுக்கின்றேன். காரணம்

02



காணி உரிமம் கோரியும், காணாமற் போனவர்களை கண்டுபிடித்துத் தரக் கோரியும் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டம்.

# வாழ்ந்த மக்களுக்கே காணி வேண்டும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்து கிளிநொச்சியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. உயர்தானியராலய வதிவிட பிரதிநிதி விக்டோரியாவிடம் மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டது.

குறித்த நான்கு பிரதேசங்களிலும் வாழ்ந்த மக்களின் காணி உரிமங்கள் மற்றும் வரைபடங்கள் என்பனவும் இந்த மகஜரில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனைப் பெற்றுக்கொண்ட வதிவிட பிரதிநிதி விக்டோரியா, அதனை உரிய தரப்பினரிடம் விரைவில் சேர்ப்பதாக தெரிவித்தார். அதேவேளை குறித்த மகஜரின் பிரதி கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனுக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நீதித்துறையில் நான் தலையிடவில்லை

## ஜனாதிபதி மகிந்த

(கொழும்பு)

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் எனது அரசாங்கம் எக்காரணம் கொண்டும் தலையிடப் போவதில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அலரிமாளிகையில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களையும் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் செய்திப் பொறுப்பாளர்களையும் சந்தித்து உரையாற்றிய போதே தெரிவித்தார்.

நீதிபதிகளின் பதவி நீக்கம், இடமாற்றம் ஆகியவற்றை நீதிச்

02

# விரிவுரையாளர்கள் இணக்கம்; மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

விடைத்தாள் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு விரிவுரையாளர்கள் சிலர் இணக்கம் தெரிவித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம். என்.ஜே.புஸ்பகுமார குறிப்பிட்டார். உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஆரம்பிக்க எண்ணியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 24ஆம், 25ஆம் திகதிகளில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் பரீட்சைகள் திணைக்களத்தில் நடத்திய

02

# விபத்தில் பல்கலை மாணவர் இருவர் பலி: கொலை என்ற சந்தேகம்?

(கொழும்பு)

கொழும்பு - கண்டி வீதி, இம்புல்கொட நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இது கொலையாக இருக்கலாம் என மாணவர் சங்கத்தின் தலைவர் சஞ்ஜீவ பண்டார சந்தேகம் வெளியிட்டுள்ளார். தமது மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்களான மேற்படி மாணவர்கள் இருவரும் தற்போது நாடு முழுவதும் இடம்பெற்று வரும் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்ற

02

# ஐ.ம.சு. கூட்டமைப்புடன் இணையுமாறு கூட்டமைப்புக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கை ஒன்றை கட்டியெழுப்புவதே எமது இலக்கு. நாட்டின் அபிவிருத்தி குறித்தே நாம் சிந்திக்கின்றோம். அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு இடமளிக்கப் போவதில்லை.

நேற்று அலரிமாளிகையில் பத்திரிகை ஆசிரியர்கள், இலத்திரனியல் ஊடகப் பிரதானிகள் ஆகியோருடனான சந்திப்பின் போது ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களுடனான இக் கலந்துயைாடலில் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவும் பங்கு கொண்டிருந்தார்.

# 'திவிநெகும' சட்ட மூலத்தை எதிர்த்து தமிழ் தேசிய கூட்டமைப்பு வாக்களிக்கும்

## இரா.சம்பந்தன் எம்.பி.

(திருகோணமலை)

உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் மாகாண சபைகளின் அங்கீகாரம் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படும் திவிநெகும சட்டமூலத்தை கிழக்கு மாகாண சபையில் சமர்பிக்கும் போது, தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கும் என அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

13ஆவது திருத்த சட்டத்தின் கீழ் மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி திட்டங்களை மத்திய அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கோள்ளப்படுவதற்கு



திவிநெகும சட்டம் அனுமதிக்கின்றது. மாகாண

02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# சிரேஷ்ட பேராசிரியர் ஒருவரின் சம்பளம் நீதிபதியின் சம்பளத்தை விட அதிகம்

இலங்கை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை கல்விக்காக செலவளிப்பதாகவும் இது சில அபிவிருத்தியடைந்த நாடுகள் கல்விக்காக செலவளிப்பதை விட அதிகமானது எனவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா கூறியுள்ளார். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் வேலை நிறுத்தம் நியாயமில்லாதது.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளமானது, ஒக்டோபரில் வழங்க ஒப்புக்கொண்ட அதிகரிப்புடன் 83.6 சதவீதம் அதிகரித்துவிடுமெனவும் இதனால் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் வேலை நிறுத்தம் நியாயமில்லாதது எனவும் அவர் கூறினார்.

இந்த அதிகரிப்புடன் சகல படிகளுடன் சேர்த்து ஒரு சிரேஷ்ட பேராசிரியரின் சம்பளம் 170,000 ரூபாவாகும் எனவும் இது ஒரு உயர்நீதிமன்ற நீதிபதியின் சம்பளத்தைவிட அதிகமானது எனவும் ஒரு விரிவுரையாளரின் சம்பளம் 54.03 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் இது 75,000 ரூபாவிலும் கூடுதலானது எனவும் அமைச்சர் கூறினார்.

"பரஸ்பர விட்டுக்கொடுப்பின் மூலம் நாம் அவர்களோடு பேச எந்த நேரத்திலும் தயாராக உள்ளோம்.

இந்த பிரச்சினையை பரஸ்பர விட்டுக்கொடுப்பின் மூலம் தீர்க்க தயாராக உள்ளோம். அவர்களின் எதிர்ப்பு ஊர்வலம் முடிவுக்கு வந்தபின் நாம் அவர்களோடு பேசுவோம். நாம் சர்வதேச தாக்கத்திற்கு ஏற்ப கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க தயாராக உள்ளோம்" என அமைச்சர் கூறினார்.

# 2013ம் நிதி ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்ட வரைவுக்கு அமைச்சரவை அனுமதி

2013ம் நிதி ஆண்டுக்கென நிதி அமைச்சர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்பித்த நிதி ஒதுக்கீட்டு சட்ட வரைவுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

ஒவ்வொரு அமைச்சு, வரி பிறநடுநிலை விடயங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு யதார்த்தமான வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்கும் வகையில் குறித்த மசோதா தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2013-2015 நடுத்தர கால செலவு கட்டமைப்பு அடையாளம் முன்னுரிமைகள் மற்றும் ஏற்கனவே தொடங்கியது மற்றும் நடந்து வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களை நிறைவு செய்தல் குறித்து இதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2013ல் அரசின் செலவு ரூ. 2520 பில்லியன் என கணிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் என்பவற்றை 7மூ பேண எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# வடக்கிற்கு டின் மீன்கள்: ஜப்பானிய அரசின் நன்கொடை

ஜப்பானிய அரசு சுமார் 180 மில்லியன் ரூபா பெறுமதியான டின் மீன்களை நன்கொடையாக இலங்கைக்கு வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகள் உலக உணவு திட்டத்தின் கீழே இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் போஷாக்கு தேவையை கருத்தில் கொண்டு மதிய போசன திட்டத்திற்கு பயன்படுத்துவதற்காக 232 மெட்ரிக் தொன் டின்மீன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால், வட மாகாணத்திலுள்ள 156,600 மாணவர்கள் நன்மையடையவுள்ளனர். ஜப்பானிய அரசின் சார்பாக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபகஷவிடம் டின் மீன்களை கையளித்தார். இந்நிகழ்வில உலக உணவுத் திட்ட பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# கொழும்பை அபிவிருத்தி செய்யும்போது ஏழைகளின் நலன் பாதிக்கப்படக்கூடாது - விமல்

குறைந்த வருமானம் பெறுகின்றவர்களை பொருட்படுத்தாமல் கொழும்பு நகரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது என நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

குடியிருப்புக்களின் சமூகத் தலைவர்களை கௌரவிப்பதற்காக கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். ஒக்டோபர் முதலாம் திகதி அனு்டிக்கப்படவுள்ள உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொருளாதார ரீதியில் புதிதாக கட்டியெழுப்பப்படும் நாடாக இலங்கை மாறியுள்ளது என்றும் ஏழை மக்களையும் ஒன்றிணைத்து கட்டியெழுப்பப்படும் நகரமாக கொழும்பு மாற்றப்படும் பட்சத்திலே நாடு முன்னோக்கிச் செல்லும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# திறமையான மாணவர்களுக்கு உதவி

மருதனார்மடம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஒன்றுசேர்ந்து தமது பிரதேசத்தில் வாழும் திறமையானதும் வாழ்வாதார வசதிகள் குறைந்த நிலைமையிலுள்ள மாணவர்களுக்கு உதவி புரியவுள்ளனர்.

இதற்காக 2011ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பு சித்திபெற்றவர்கள் தரம் 11இல் சிறப்புப் பெறுபேறுகள் பெற்றவர்கள், உயர்தர வகுப்பில் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களின் பெயர் விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

இவ்விபரங்களை ஆராய்ந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு உதவிகள் கிடைக்கவுள்ளது. (01)

# பல்கலையின் கிளிநொச்சி வளாகத்தில் சிரமதானப் பணி

கிளிநொச்சியில் அமைந்துள்ளயாழ் பல்கலைக்கழகவிவசாயமற்றும் பொறியியல் பீடவளாகத்தில் நேற்றுக்காலைபாரியசிரமதானப் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

சிரமதானப் பணிகளில் சுமார் 2000ற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

பாரம்பரியகைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சிஅபிவிருத்திஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசுசந்திரகுமார் அவர்களும் கலந்துகொண்டுமேற்படிசிரமதானப் பணிகளைஆரம்பித்துவைத்தனர்.

பல்கலைக்கழகமாணவர்கள்,பொதுமக்கள்,அரச-அதிகாரிகள்,பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக் கழகங்களின் விரிவுரையாளர்கள், அதிகாரிகள், பணியாளர்கள், கல்விச் சமூகத்தினர் எனப் பல்வேறுதரப்பினரும் கலந்துகொண்ட இச்சிரமதானப் பணிகள் மிகவும் காத்திரமானமுறையில் பாரியஅர்ப்பணிப்புக்களுடன் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்றையதினசிரமதானப் பணிக-ளில் கிளிநொச் சிமாவட்டஅரசஅதிபர் திருமதிரூபவதிகேதீஸ்வரன், யாழ் கல்கலைக்கழகஉபவேந்தர் செல்விவசந்திஅரசரட்ணம்,பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள் உட்படபலர் கலந்துகொண்டனர்.

# செயல்முறை விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்தல் செயலமர்வு

மருதனார்மடம்

இலங்கை இடைநிலைப் பாடசாலைகளில் செயல்முறை விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவதற்காக விஞ்ஞானக் கற்பித்தல் உபகர்ணங்களை விருத்தி செய்தல் சம்பந்தமான செயலமர்வினை வடமாகாண கல்வித்திணைக்களம் நடாத்தவுள்ளது.எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம், இரண்டாம், மூன்றாம் திகதி களில் வதிவிட செயலமர்வாக வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல் லூரியில் இடம்பெறும்.

யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய கல்வி நிறுவகமும் கல்வி அமைச்சும் இணைந்து வடமாகாணத்திலுள்ள விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், விஞ்ஞான பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், களத்துறை கல்வி மத்திய நிலைய பொறுப்பாசிரியர் ஆகியோர் அடங்கிய 12 வலயத்தைச் சேர்ந்த 60 பேருக்கு மேற்படி செயலமர்வு நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது. (01)

# சிறுவர்களுக்கான நுண்ணறிவுத்திறன் போட்டி

பாடசாலைகள் தோறும் மாணவர்களின் நுண்ணறிவுத்திறனை வளர்க்கும் பொருட்டு தரம் ஒன்று முதல் 5 வரையான மாணவர்களுக்கு போட்டிகள் நடைபெறவுள்ளது. இப்போட்டியின்பால் வேறுபா டின்றி 4 பேர் கொண்ட குழுவினர் பங்குபற்ற முடியும்.

கோட்ட மட்டத்தில் வெற்றிபெறும் இரு குழுக்கள் வலயமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்படுவதுடன் வலய மட்டப் போட்டிகளில் வெற்றி பெறும் குழுக்கள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள்.

வலிகாமம் கல்வி வலய மாணவர்களுக்கான போட்டி அக்டோபர் மாதம் 25ஆம் திகதியன்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் எனவும், மாகாண மட்டப் போட்டிகள் நவம்பர் மாதம் 3ஆம் திகதி நடைபெறவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது (01)

# கடையிற் சுவாமிகள் குருபூசை

கடையிற் சுவாமிகள் சமாதிச் சிவாலயமான நீராவியடி ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைஸ்தீஸ்வரநாதர் தேவஸ்தானத்தில் நாளை (சனிக்கிழமை) காலை சுவாமிகளது குருபூசை வைபவம் நடைபெறவிருக்கிறது.

வைத்தீஸ்வர நாதருக்கு விசேட அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும் இந்த குருபூசை நிகழ்வின் சிறப்பு அம்சமாக கடையிற் சுவாமிகள் பற்றிய சொற்பொழிவும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் அன்னதானமும் இடம்பெறும்.

# நீதித்துறையில் நான்...(தொடர்)

சேவை ஆணைக் குழுவே கையாள்கின்றது. அதில் நான் தலையிட தயாரில்லை என்றும் ஜனாதிபத்தி கூறினார்.

# விபத்தில் பல்கலை...(தொடர்)

நிலையில், நேற்று அதிகாலை 3.30 மணியளவில் துண்டுப் பிரசுரங்களுடன் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது" எனவும் அவர் சொல்கிறார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் கொழும்பு மற்றும் மாத்தளைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் றுகுணு பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்பவர்கள் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாக பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

# விரிவுரையாளர்கள்...(தொடர்)

பேச்சுவார்த்தையை அடுத்து, ஒரு சில பாட விதானங்களுக்கான விடைத் தாள் மதிப்பீடுகளை மேற் கொள்ள இணக்கம் காணப்பட்டதாக அவர் கூறினார்.

உயர்தரப் பரீட்சையின் விடைத் தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக சுமார் 400 பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் வழமையாக ஈடுபடுத்தப்படுவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சுட்டிக் காட்டினார்.

# ஆறு மாதங்களுக்குள்...(தொடர்)

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தேசிய பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட அறிக்கை ஆறு மாதங்களில் வெளியிடப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒரு விடயமே கூட்டமைப்புக்கு போதுமானது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்து கொண்ட பின்னரும் ஆறு மாத காலத்தில் தீர்வுத்திட்ட அறிக்கை வெளியிடப்படாவிடின் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட முடியும். தமது பக்க நியாயத்தை வெளிப்படுத்தவும் முடியும். இதனை நானும் ஏற்றுக்கொள்கின்றேன் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

# திவிநெகும...(தொடர்)

சபைகளுக்கு 13 ஆவது திருத்தத்தின் படி வழங்கப்பட வேண்டிய அதி காரங்களை பெறுவதற்காக போராடுவோம் என்று கூறும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாகாண சபை உறுப்பினர்கள் கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களிப்பார்களா? எனவும் சம்பந்தன் கேள்வி எழுப்பினர்.

கிழக்கு மாகாண சபையின் அங்குரார்ப்பண அமர்வு எதிர்வரும் திங் கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை திவிநெகும சட்டமூலத்திற்கு சபையில் அங்கீகாரம் பெறுவதற்காக சமர்ப்பிக் கப்படவுள்ளதாக மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பல்கலை விரிவுரையாளர்களின்றி விடைத்தாள் திருத்தும் பணியா?

## தரமாக இருக்காது என்கிறது பல்கலை ஆசிரியர் சங்க சம்மேளனம்

பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளவாறு பல்கலைக் கழக விரிவுரையாளர்களின்றி உயர்தர விடைத்தாள் புள்ளியிடும் வேலை அடுத்த வாரம் தொடங்குமாயின் விடைத்தாள் புள்ளியிடுதலின் தரம் குறைவாக இருக்குமென ஆசிரியர் சங்கங்கள் எச்சரித்துள்ளன.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் தொடரினும் க.பொ.த. உயர்தர விடைத்தாள் புள்ளியிடும் வேலை ஒக்டோபர் முதலாம் திகதி தொடங்கும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார அண்மையில் தெரிவித்திருந்தார்.

வழமையாக க.பொ.த. உயர்தர விடைத்தாள் புள்ளியிடுதலை ஆசிரியர்கள் செய்வர். இதன் போது, குழுக்களின் மேற்பார்வையாளர்களாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடமை புரிவர், இது புள்ளியிடுதலில் உயர் தரம், நம்பிக்கை, நேர்மை என்பவற்றை உறுதி செய்வதற்கான ஏற்பாடாகும்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் புள்ளியிடுதல் தொடர்பான கூட்டத்திற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் 400 பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்திருந்த போதிலும் 16 பேர் மட்டும்தான் பங்குபற்றினர். இவர்களில் பெரும்பான்மையானோர் இளைப்பாறியவர்களாவர் என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

உண்மையாகவே உயர்தர விடைத்தாள் புள்ளியிடுதல் தொடர்பாக அக்கறை இருந்தால் எமது கோரிக்கைகள் தொடர்பில் தீர்வை வழங்க வேண்டும். அதன் பின்னரே நாம் வேலைக்கு செல்லக் கூடியதாக இருக்கும். ஆனால் இந்த பிரச்சினை குறித்து மேலும் பேசுவதற்குக்கூட எமக்கு நேரம் வழங்கப்படவில்லை எனப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி கூறினார்.

# தீர்வு தலைவர்களுக்கானதல்ல மக்களுக்கானது என்கிறார் இரா.சம்பந்தன் எம்.பி.

தீர்வு தமிழ் மக்களுக்கு மாத்திரம் அல்ல, முஸ்லிம் மக்களுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும். இறைமை மக்களுக்கு உரியது. இது தலைவருக்கோ அல்லது கட்சிக்கோ மாத்திரம் உரியது அல்ல. ஜனநாயம் இறைமையின் ஓர் அம்சம். இது மக்களுக்கு உரியது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பற்றிய ஒரு நோக்கு என்ற தொனிப்பொருளில் திருகோணமலை நியு சில்வர் ஸ்டாரில் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. இதில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டி யிட்டு தெரிவான சி.தண்டாயுதபாணி, கு.நாகேஸ்வரன், ஜெ.ஜனார்த்தன் ஆகியோருடன் வேட்பாளர்களான மருத்துவர் திருமதி இந்திராணி தர்மராஜா, வெ.சுரேஷ், சி.பளீர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதில் சம்பந்தன் எம்.பி. மேலும் உரையாற்றுகையில், மக்களின் ஜனநாயக தீர்வு புறந்தள்ளப்பட்டு முஸ்லிம் மக்களின் இறைமை உதாசீனம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு ஹக்கிம் - முஸ்லிம் மக்களுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும் எனத் தெரிவித்தார்.

# மோதரையில் இளைஞர் அடித்துக் கொலை

மோதர - மட்டக்குளி - தொட்டு பொல வீதியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் (26) இரவு 8 மணியளவில் இந்தக் கொலை ...ம்பெற்றுள்ளதாக மோதர பொலி...ர் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவர் 21 வயதுடைய இளைஞராவார். இவர் வசித்து வந்த வீட்டில் தனியார் ஆலயம் ஒன்று இயங்கியதாகவும் அதில் குறித்த இளைஞரும் அவரது தந்தையும் பூஜை நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டுக்கு அருகில் இருந்தவர்கள் இளைஞரின் வீட்டுக்குள் நுழைந்து கடுமையாக தாக்குதல் நடத்தியுள்ளனர். படுகாயமடைந்த இளைஞர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். மோதர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கூடங்குளம் அணுமின் நிலைய கதிரியக்க பாதுகாப்புக் குறித்து இந்தியா அதிக கரிசனை

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம் கூறுகிறது

இந்தியாவின் கூடங்குளம் அணுமின் நிலையமானது உயர் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது என இந்தியா வலியுறுத்தியுள்ள அதேவேளை, இந்த அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு குறித்த இலங்கையின் கரிசனைகளை இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய, நட்புறவின் அடிப்படையில் இந்தியா ஆராய்கிறது என இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

கதிரியக்க பாதுகாப்பு குறித்து இந்திய அரசாங்கம் அதிகபட்ச கவனம் செலுத்துவதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அணுசக்தி பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தம் (1994), அணுசக்தி விபத்து தொடர்பான உடனடியாக அறிவுறுத்துவது தொடர்பான ஒப்பந்தம் (1986), அணுசக்தி விபத்து அல்லது கதிரியக்க அவசரநிலையில் உதவியளித்தல் தொடர்பான ஒப்பந்தம் ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்ட கடப்பாடுகளுக்கு இந்தியா இணங்கி நடப்பதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

அணுசக்தி, அணை பாதுகாப்பு முதலான துறைகளில் ஒத்துழைப்பது தொடர்பாக இந்தியாவும் இலங்கையும் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் தொடரும் எனவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் கூறியுள்ளது.

கதிரியக்க கழிவுகளை கையாளுவதற்கான அனைத்து வளங்களையும், பொருத்தமான அவசர கால பதிலளிப்புத் திட்டங்களையும் இந்தியா கொண்டுள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கதிரியக்க பாதுகாப்புக் குறித்த தனது உண்மையான அர்ப்பணிப்பை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என சூழலியலாளரான ஜகத் குணவர்தன மற்றும் ஏனைய சூழலியலாளர்கள் பலர் கோரியுள்ளனர்.

இந்தியாவானது தமது அர்ப்பணிப்பில் உண்மையாக இருந்தால், அணுசக்தி மற்றும் கதிரியக்க பாதுகாப்பு தொடர்பில் இலங்கையுடன் இந்தியா இருதரப்பு உடன்படிக்கையொன்றை செய்து கொள்ள வேண்டும் என மேற்படி சூழலியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# உலக சுற்றுலா தினம் நேற்று அனுஷ்டிப்பு

உலக சுற்றுலா தினம் நேற்று அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டதான பிரதான வைபவம் நேற்றுக் கொழும்பில் இடம்பெறுகிறது. மாகாண மட்டத்திலும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

உலக சுற்றுலா நாள் (World Tourism Day) உலக சுற்றுலா நிறுவனத்தின் ஆதரவில் செப்டெம்பர் 27ஆம் நாளில் 1980ஆம் ஆண்டிலிருந்து உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

1979இல் ஸ்பெயினில் நடை-பெற்ற ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா நிறுவனத்தின் மூன்றாவது பொது அவைக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உலகெங்கும் எடுத்துக் காட்டவும் சுற்றுலா எப்படி மக்களின் சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை எடுத்துக்காட்டவும் இந்நாள் சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

ஒக்டோபர், 1997இல் துருக்கியில் நடந்த உலக சுற்றுலா நிறுவனத்தின் கூட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு நாடு இந்நிகழ்வை நடத்த அழைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

2003இல் பீக்கிங்கில் இடம் பெற்ற கூட்டத்தில் பின்வரும் ஒழுங்கு முறையில் இந்நாள் கொண்டாடப்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது, 2006 இல் ஐரோப்பா, 2007இல் தெற்காசியா் 2008இல் அமெரிக்கா, 2009இல் ஆபிரிக்கா. 2007இல் இலங்கையில் இந்நாள் கொண்டாடப்பட்டது.

# அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக செல்ல முயற்சித்த மேலும் 19 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் சென்று கொண்டிருந்த 19 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேவெந்திரமுனை கடலில் இருந்து 27 மைல் கடல் தூரத்தில் இவர்கள் வழிமறிக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 9 முஸ்லிம்கள், 7 சிங்களவர்கள் மற்றும் மூன்று தமிழர்கள் அடங்குவர்.

இவர்கள் கொழும்பு, வவுனியா, திருகோணமலை, புல்மோட்டை மற்றும் திக்வெல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

குறித்த நபர்கள் காலி துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கென குற்றத்தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# 18ஆவது கடற்படைத் தளபதி பதவியேற்றுக் கொண்டார்

இலங்கையின் புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே பதவியேற்றார்.

இலங்கையின் 18ஆவது கடற்படைத் தளபதியான ரியர் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் வைஸ் அட்மிரல் ஆக ஜனாதிபதியினால் தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்திற்கு நேற்றுக் காலை விஜயம் செய்த புதிய கடற்படைத் தளபதிக்கு கடற்படையினரால் விசேட மரியாதை அணிவகுப்பு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடற்படைத் தலைமையகத்திலுள்ள அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றார்.

1978 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி கெடெட் அதிகாரியாக கடற்படையில் இணைந்து கொண்ட இவர் 34 ஆண்டு காலம் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு முதுமாணிப் பட்டங்களை பெற்றுக் கொண்டுள்ள இவர் வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் வட மத்திய கடற்படை கட்டளை தளபதியாகச் சேவையாற்றியுள்ளார்.

கடற்படையின் பல உயர் விருதுகளை பெற்றுள்ள வைஸ் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே கடந்த 25ஆம் திகதி வரை கிழக்கு கடற்படை கட்டளை தளபதியாக கடமையாற்றினார்.

# புதையல்: 19 பேர் கைது

வெல்லவ-கெலம்பியாவ குண்டல விகாரைக்கு அருகில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் (26) இரவு 11.40 அளவில் கைது செய்யப்பட்ட இவர்கள் குருநாகல் நீத வான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இதேவேளை, மீகலெவ புராதன வனமான கேகாலை வனத்துக்குள் அநாவசியமாக நுழைந்த 8 பேரும் நுழைய தயாராகவிருந்த 8 பேரும் கைது செய்யப்பட்டனர்.

ரெஸ்வெஹர விகாரைக்கு அருகில் வைத்து இவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் குருநாகல், பன்னல, காலி, குளியாபிட்டி, பொதுஹெர, வலப்பனை, எஹலியகொட, நாரம்மல, கலேவெல மற்றும் வீரவில ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

## இன்றைய இராசி பலன் (28.09.2012)

**நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**நட்சத்திரம்** : சதயம் பி.ப. 2.26 வரை அதன் பின் பூரட்டாதி
**திதி** : திரயோதசி காலை 8.47 வரை. அதன் பின் சதுர்த்தசி
**சுபநேரம்** : 6.02 - 7.32
**இராகுகாலம்** : 10.32 - 12.02
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : காரிய சித்தி, பணப்புழக்கம், பிரயாண முயற்சி
**இடபம்** : அதிக செலவு, குடும்ப மகிழ்ச்சி, நண்பர்கள் ஆதரவு
**மிதுனம்** : அலைச்சல், மனக்குழப்பம், முயற்சியின் மேல் பலன்
**கடகம்** : காரிய முயற்சி, பெற்றோர் ஆதரவு, புதிய தகவல்
**சிங்கம்** : அதிக யோசனை, நண்பர்கள் தொல்லை, தொழில் பாதிப்பு
**கன்னி** : பெரியோர் அறிவுரை, தந்திரமாக செயற்படல், தொழிலாளருடன் முரண்பாடு
**துலாம்** : வீண் மனப்பயம், ஏமாற்றம், உறவினர் தொல்லை
**விருச்சிகம்** : மனக்கவலை, அவமானம், தவறான செய்கை
**தனுசு** : புதிய நட்பு, பிரயாணக் கஷ்டம், வேலையாட்களால் நன்மை
**மகரம்** : மனமகிழ்ச்சி, எதிர்பாரா நன்மை, தொழில் உற்சாகம்
**கும்பம்** : நற்செய்தி, செலவினம், தொழில் சிரமம்
**மீனம்** : புதுமுயற்சி, இல்ல மகிழ்ச்சி, தொழில் விருத்தி

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# இன்று வைர விழாக் காணும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி



"ஒரு பாடசாலை திறக்கப்படும் பொழுதுஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" என்கின்ற மகுட வாக்கியத்துக்கு அமையமருத நிலமாம் கிளிநொச்சிமாநகரில் பல் ஆயிரக்கணக்கான நல்ல பிரஜைகளை உருவாக்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூ வைர விழாக் காணுகிறது.

1952 இல் தொடங்கி இன்றைக்கு அறுபது ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய



தற்போதைய அதிபர்

மிகப்பழம் பெருமை படைத்ததுதான் இந்துக்கல்லூரி. அப்படிப் பட்டநீண்ட நெடியபாரம்பரியம் கொண்டது.

பூமிதன்னைத் தானேசுற்ற இருபத்திநான்கு மணிநேரமாகும் இரவும் பகலும் நிகழ்கின்றன. அதே பூமிசூரியனை சுற்றுகிறது. ஒருசுற்றுசுற்றுவதற்கு ஒருவருடம் ஆகிறது.அதாவது எங்கள் இந்துக்கல்லூரி பூமியில் இருப்பதால் இது வரை.அறுபது முறைசுற்றி சுழன்று பலமாணவ நட்சத்திரங்களை உருவாக்கியுள்ளது .

இப் பள்ளிக்கூடம் அமைந்திருக்கின்ற சூழல் ஏனைய பாடசாலைகளில் இருந்துவேறுபட்டது. மகாதேவா ஆச்சிரமம், ஆரோபணம் இளைஞர் இல்லம்,சைவச் சிறுவர் இல்லம், மகளிர் ஆச்சிரமம், காந்திநிலையம் மற்றும் மீனாட்சிஅம்மன் கோவில் போன்றபுனித இடங்களுக்கு மத்தியில் ஆதரவு அற்றமாணவர்களும் இங்கே, கல்வி பயில்கின்றனர். இப் பாடசாலையின் முதலாவது அதிபராக பொறுப்பேற்றவர் திரு கா. நாகலிங்கம் ஆவார். நெல் வயல்கள் சூழ்ந்த மருத நிலமாம் கிளிநொச்சி மண்ணில் ஏழாம் வாய்க்கால் என்னும் இடத்தில் டெயிலர் வீதியில் (கரடிபோக்கு-உருத்திரபுரம் வீதி ) 28 .09 1952 இல் சட்டத்தரணி குலசிங்கம் அவர்களின் மூத்தமருமகன் திருவேகந்தையா அவர்களின் காணியில் ஒருசில மாணவர்களுடன் ஒரு கொட்டிலில் சைவவித்தியா விருத்தி சங்கத்தினால் கிளிநொச்சித் இந்துதமிழ் கலவன் பாடசாலை என்ற பெயரில் இது ஸ்தாபிக்கப்பட்டது.

பாடசாலைக் கீதத்தை இயற்றியவர் பிரபல கவிஞர் சுத்தானந்தபாரதியார் ஆவர். கற்று உணர்ந்து ஒழுகுஎன்ற மகுடவாக்கியத்தை தாங்கி கல்விப் பணியைதொடர்கின்றது . அதன் வளர்ச்சிப் படிகளில் பல்வேறு புகழ்பெற்ற அதிபர்களும், ஆசிரியர்களும்க டமை ஆற்றியுள்ளனர். அமரர்.பொன்சபாபதி, திரு.ம.பத்மநாதன், அமரர்.வே.கதிரவேலு (அப்புஜி), திருமதி தேவகி புவனேஸ்வரன், திருகயிலாயபிள்ளை, அமரர். கசிவசாமி, திரு.வைரமுத்து போன்ற வர்கள் குறிப்பிடத்தக் கவர்கள். கிளிநொச்சி மாவட்டத்தில் சகலதுறைகளிலும் முன்னிலை வகிக்கும் பாடசாலையாக நிமிர்ந்து நிற்கின்றது. ஆண்டுதோறும் இதன் பெருமை கூறும் வகையில் "இந்துஉலா" எனும் நாமத்தில் நூல் வெளிவந்துள்ளது. இப் பாடசாலையில் கல்விகற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக, அதிபர்களாக, ஆசிரியர் களாக, கல்விப்பணிப் பளார்களாக, மருத்துவர் களாக, எந்திரிகளாக, பட்டதாரிகளாக என இன்னும் சமூகத்தில் பல்வேறு மட்டங் களில் உயர்ந்த நிலையில் இருகின்றார்கள். மகாதேவா ஆச்சிரமம், குருகுலம் போன்ற ஆன்மீக நிலையங்களுடன் நெருங்கியதொடர்பை கொண்டது.

இப்பாடசாலை கல்வியிலும், விளையாட்டுகளிலும், சாரணியம்,செண்ட் ஜோன்ஸ் படைமுதலுதவிபிரிவுப் ஏனைய இணைப்பாடவிதான-செயல்களையும் செய்துவருகின்றது.பௌதிகவ ளங்களாக இரண்டுமாடிக் கட்டங்கள்,ஒருமாடிகட்டடம்.க பொ.தாசாதாரணமற்றும் உயர்தரஆய்வு கூடங்கள் அத்தோடுமாவட்டத்தில் மிகப்பெரியமண்டபத்தையும் கொண்டுள்ளது.

எமது பாடசாலைமக்க ளோடு மக்களாக இரு முறை இடப்பெயர்வை சந்தித்தது. முதன் முதலாக 1996ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 2001 மேமாதம் வரை ஆனைவிழுந்தான் எனும் இடத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தது.பின்னர் 2008 பிற்பகுதியில் இரண்டாவது தடவையாக கல்மடுநகர் பகுதியில் ஒரு சிலமாதங்கள் இயங்கியது. இப் பாடசாலையை இக்கட்டான நேரங்களில் வழிநடத்தி சென்றவர் தற் போதைய அதிபர் சிபாலகிருஷ்ணன் என்னும் ஆளுமை மிக்கநிர்வாகி.இக் கட்டான சூழ் நிலைக்குமுன்னர் இங்கு இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றார்கள். ஏராளமானவர்கள் பல்கலைக்கலைக் கழகத்துக்கு தெரிவு ஆகியுள்ளனர் .இக் கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டசாதனைகளையும் , வெளிநாட்டு புலமைப் பரிசிலும் பெற்றுள்ளார்.

திரு.கயிலாயபிள்ளை அவர்களின் காலத்தில் கிளிநொச்சி இந்தும காவித்தியாலயம் என்று அழைக்கப்பட இந்த பாடசாலை பின்னர் கல் லூரி யாகதரம் உயர்த்தப்பட்டது. அத்தோடு மட்டுமல்லாமல் இப் பள்ளியின் ஆரம்பப் பிரிவு தனியாக்கப்பட்டு இந்து ஆரம்பவித்தியாலயமென பெயர் மாற்றப் பட்டது. எமதுபாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களான திரும. திபிரபாகினி, திருமதி அபராஜிதன், திரு. கருணாநிதி போன்றோர் இறுதியாக நடை பெற்றபோரிலே மரணம் அடைந்துள்ளார்கள் 1991 ஜூன் மாதம் ஐந்தாம் நாள் எங்கள் பாடசாலையின் உயர்தரமாணவன் செல்வன் கனகசிங்கம் சத்தியமூர்த்தி பள்ளியிலேயே மரணமடந்தமை பாடசாலைவரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்வாகும். எங்கள் பாடசாலையின்



முதல் அதிபர்

பழையமாணவர் சங்கசெயலரும் பிரபலமான வைத்தியரும் ஆகியமருத்துவர் த சத்தியமூர்த்திஅவர்கள் இடர் காலத்தில் தனது உயிரை துச்சமாக மதித்து மக்களுக்குசேவை ஆற்றி சர்வதேசவிருதை வென்று எமதுபள்ளிக்கு பெருமைசேர்த்தார்.இப் பாடசாலை வரலாற்றில் முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அமரர் பொன் சபாபதிஅவர்கள் அரும்பாடுபட்டுஉ ழைத்தார். போருக்குபிற்பாடு இப் பாடசாலையில் பிரபலமான நிகழ்வுகளாக வடமாகாணகலை இலக்கிய விழாபோன்ற பல நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

இன்று 28 ஆம் திகதி தனது வைரவிழாவை வெகு விமர்சையாக எமது பாடசாலை கொண்டாட வுள்ளது.

இப் பாடசாலை ஒருதேசிய பாடசாலையாக தரமுயர வேண்டும் என்பதே எங்கள் கனவாகும்.

**மாவை.**
**திரவியச்செல்வன் ஸ்ரீரஜீவன்**
**இலங்கை**
**ரஜரட்டபல்கலைக்கழகம்.**

## பாராளுமன்றத் தெரிவுக் குழு:

# கூட்டமைப்பு பின்னடிப்பது ஏன்?

### அமைச்சர் ராஜித சேனாரட்ன கேள்வி

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தேசிய பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட அறிக்கை ஆறு மாதங்களில் வெளியிடப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் இடம் பெற தயக்கம் காட்டுவது ஏன் ?ன்று புரியவில்லை என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக ஆறு மாதங்களில் தீர்வுத்திட்ட அறிக்கை வெளியிடப்படாவிடின் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட முடியும். தமது பக்க நியாயத்தை வெளிப்படுத்தவும் முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் மற்றும் தேசிய பிரச்சினை தீர்வுத்திட்ட விவகாரம் குறித்து கூறும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற நோக்கத்தில் ஆளும் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெற வேண்டும் என்று பரவலாக கோரப்பட்டுவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத் தெரிவுக்குழு வில் கலந்துகொள்ளவேண்டும் என்று நானும் அழைப்பு விடுக்கின்றேன். காரணம் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக தேசிய பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட அறிக்கை ஆறு மாதங்களில் வெளியிடப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒரு விடயமே கூட்டமைப்புக்கு போது மானது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்துகொண்ட பின்னரும் ஆறு மாத காலத்தில் தீர்வுத்திட்ட அறிக்கை வெளியிடப்படாவிடின் அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது எதிர்ப்பை வெளியிட முடியும். தமது பக்க நியாயத்தை வெளிப்படுத்தவும் முடியும்.

இதனை நானும் ஏற்றுக் கொள்கின்றேன் என்றார்.

# ஆஸி. வீரர்களின் அறைக்குள் புகுந்த இளைஞன் கைது

### ஆட்டநிர்ணய சதியா? என சந்தேகம்

ஐ.சி.சி. இருபது20 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் அவுஸ்திரேலிய வீரர்கள் தங்கியுள்ள ஹோட்டல் அறைக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் இலங்கை இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆட்டநிர்ணய சதியில் ஈடுபடுவதற்காக அல்லது வீரர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துவதற்காக மேற்படி இளைஞர் அங்கு சென்றாரா என அறிவதற்காக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் அவுஸ்திரேலிய வீரர்கள் மேற்படி ஹோட்டலின் 8 ஆவது தளத்தில் இரு அறைகளில் தங்கியிருப்பதாக பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டில் ஹோட்டலின் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவற்றில் ஒரு அறைக்குள் நுழைந்த மேற்படி இளைஞர் அவுஸ்திரேலிய வீரர்களிடம் "உங்களுக்கு கேளிக்கை எதுவும் வேண்டுமா?" என கேட்டதாகவும் மேற்படி பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரான இளைஞர், கொழும்பு நீதிமன்றமொன்றில் ஆஜர்படுத்தப்பட்டபின் 50,000 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் 1000 ஏக்கரில் சோளம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் உப உணவு பயிர்ச்செய்கையான சோளம் செய்கை இம்முறை 1000 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய திணைக்கள உதவி பணிப்பாளர் இரா. ஹரிகரன் தெரிவித்தார்.

செய்கை பண்ணப்பட்ட சோளத்தின் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமாக வவுணதீவு, வெல்லாவெளி, செங்கலடி, வாகரை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் அதிக இடங்களில் சோளம் செய்கை பண்ணப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் மர நடுகை தினம்

சர்வதேச மர நடுகை தினத்தை முன்னிட்டு யாழ் பொலிஸ் நிலை யத்திற்கான புதிய கட்டிடத் தொ குதி வளாகத்தில் மர நடுகை வைபவம் நேற்று நடைபெற்றது.

கொழும்பு லயன்ஸ் கழகமும் சடஹரிதா மர நடுகை திட்டமும் இணைந்து நேற்று காலை 10 மணிக்கு மர நடுகை செயற்திட் டத்தை ஆரம்பித்தது. மர நடுகையினை யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா மர நடுகையினை ஆரம் பித்து வைத்தார்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத் தியட்சகர் செ.ஸ்ரீ.குகநேசன் மற் றும், யாழ். தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா உட்பட கொழும்பு லய ன்ஸ் கழக திட்டமிடல் இணைப் பாளர் பி.ரமேஷ் மற்றும் சட ஹரிதா பிளான்ட்டேசன் நிறுவனத் தின் யாழ். மாவட்ட முகாமையாளர் ராம், பிளான்ட்டேசன் நிறுவனத்தின் சிரேஸ்ட விற்பனை முகவர் ஆர்.ராஜேஸ்வரன் ஆகி யோர் கலந்து கொண்டனர். சர்வதேச மரநடுகை தினம் ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.



# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவுசெய்ய இலங்கை தமிழரசுக் கட்சியினர் எதிர்ப்பு

### -சுரேஷ் எம்.பி.

கூட்டமைப்பை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான தமிழரசுக் கட்சி எதிர்ப்பு காட்டுகிறது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் அதிகார பூர்வ பேச்சாளருமான சுரேஷ் பிரேமசந்திரன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை பற்றி கருத்து தெரிவித்த சுரேஷ் பிரேமசந்திரன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே இதை ஒரு கட்சியாகப் 'பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை இருந்ததாகவும், இப்போது, போருக்குப் பின்னர் இதற்கான அவசியம் அதிகரித்திருப்பதாகவும் கூறினார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எல்லாக் கட்சிகளும் இதற்கு இணங்கினாலும், தமிழரசுக் கட்சி மட்டும் இதற்கு உடன்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே கூட்டமைப்பு பல்வேறுபட்ட கட்சிகளின் ஒரு 'தளர்ச்சியான கூட்டணியாகவே' இருநது வருவதாகவும் இது தமிழர்களின் அரசியல் நலன்களுக்கு வலு சேர்ப்பதாக இல்லை என்றும் அவர் கூறினார்.தனது கருத்துக்கள் எதிர்கால தலைமைப் பதவிக்கான போட்டி என்ற அடிப்படையில் புரிந்து கொள்ளப்படக்கூடாது, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பாராளுமன்ற அரசியலைத்தாண்டி, மக்கள் இயக்கமாகவும் வலுப்பெறவேண்டும் என்ற அடிப் படையிலேயே இவை புரிந்து கொள்ளப்படவேண்டும் என்று சுரேஷ் பிரேமசநதிரன் தெரிவித்துள்ளார்.

# பஸ்வண்டி-மோட்டார்சைக்கிள் விபத்து தந்தை பலி: தாயும் பிள்ளையும் காயம்

### புத்தளம், வண்ணாத்திவில்லில் சம்பவம்

புத்தளம், வண்ணாத்திவில்லுப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சம்பவ இடத்தில் ஒருவர் பலியானதுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை பலியான அதேவேளை, தாயும் 2 மாதக் குழந்தையும் காயமடைந்துள்ள நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மன்னாரிலிருந்து சிலாபத்துறையூடாக கற்பிட்டி சென்றுகொண்டிருந்த பஸ், மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி விபத்திற்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இவ்விபத்து தொடர்பில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தின் மின் உற்பத்தி 2013இல் ஆரம்பமாகும்

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்வரும் 2013ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படும் என்று இந்திய அணுசக்தித் துறைத் தலைவர் ஆர்.கே.சின்ஹா கூறியுள்ளார்.

இந்திய அணுசக்தி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"கூடங்குளம் அணு மின் நிலையத்தில், ஆயிரம் மெகாவொட் திறன் கொண்ட முதல் பிரிவில், அடுத்த ஆண்டு மின் உற்பத்தி ஆரம்பிக்கப்படும். அணுசக்தி கட்டுப்பாடு கழகத்தின் நிபந்தனைகளாலும், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளாலும், மின் உற்பத்தி ஆரம்பிக்குத் நாளை சரியாக கூற முடியாதுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில், எரிபொருள் நிரப்பும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் சில மாதங்களில், இப்பணிகள் நிறைவடையும்.

மின் உற்பத்தி ஆரம்பித்தால், தமிழகத்தின் மின் பற்றாக்குறை ஓரளவுக்கு குறைவடையும். அதே நேரத்தில், இரண்டாவது மின்உற்பத்தி பிரிவு, குறிப்பிட்ட காலத்துக்குள் செயற்பட ஆரம்பிக்கும்.

இன்றைய சூழ்நிலையில், தொழில் நுட்பம், மூலப்பொருள் போன்றவை பற்றி கவலைப்படத் தேவையில்லை. மக்களின் ஒப்புதலை பெறும் வகையில், நம்மை தயார் படுத்திக கொள்ள வேண்டும். அணுக்கதிர் வீச்சால் ஏற்படும், அபாயம் பற்றிய விழிப்புணர்வை, மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்" என்று கூறியுள்ளார்.

### இந்திய அதிகாரி அறிவிப்பு

## 22,500 கிலோ கழிவு தேயிலை: இருவர் கைது

விற்பனைக்கு எடுத்துச் செல்வதற்கு தயாரான நிலையில் வைக் கப்பட்டிருந்த ஒரு தொகுதி கழிவு தேயிலையுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராஜகிரிய விசேட அதிரடிப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின்படி களனிப் பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபரகளிடமிருந்து 22,500 கிலோகிராம் கழிவு தேயிலை மீட்கப்பட்டுள்ளது.

விசாரணைகளுக்காக கைப்பற்றப்பட்ட தேயிலை மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் குற்றத் தடுப்பு பிரிவினரிடமும் இலங்கை தேயிலை சபையிடமும் ஒப்படை க்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## ஜே.வி.பி. மீண்டும் பயமுறுத்துகிறது

அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் 13,442 ரூபா சம்பள உயர்வு வழங்கும்படி ஜனதா விமுக்தி பெரமுனவின் தொழிற்சங்கமான தேசிய தொழிற்சங்க மையம் கோரியுள்ளது. இந்தச் சம்பள உயர்வை அரசாங்கம் வழங்கத் தவறினால் நாட்டை முடக்குகின்ற அளவுக்கு பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக அத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. நாட்டில் விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். மக்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதும் உண்மைதான்.

ஜே.வி.பி. கடந்த காலத்தில் மக்கள் மத்தியில் பெற்றிருந்த செல்வாக்கை தற்போது இழந்துவிட்டது என்ற உண்மையோடு வைத்துப் பார்க்கையில் நாட்டை ஸ்தம்பிக்கச் செய்யக்கூடிய அளவுக்கு ஒரு பாரிய தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்தக்கூடிய நிலையில் அந்தக் கட்சி இல்லை. ஜே.வி.பி. மட்டும் வெறுமனே ஒரு தொழிற்சங்கப் போராட்டத்துக்கு அழைப்பு விடுப்பதால் அரசாங்கம் அசைந்து கொடுக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. சாதாரண தொழிலாளர், விவசாயிகள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற கட்சியாக ஜே.வி.பி. ஒரு காலத்தில் திகழ்ந்தது உண்மை. அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கான ஒரு போராட்டத்தை ஜே.வி.பி. நடத்த விரும்பினால் முதலில் ஏனைய தொழிற்சங்கங்களுடன் இது பற்றிக் கலந்துரையாடி ஒரு பொதுவான இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். அப்போதுதான் வலுவான ஒரு தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இலங்கையின் வரலாற்றில் எத்தனையோ தொழிற்சங்கப் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. பெரும்பாலானவை தோல்வியில் முடிந்திருக்கின்றன. வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு ஒரு நியாயமான போராட்டத்தை ஜே.வி.பி. முன்கொண்டு செல்லத் தவறினால் அது பெரும் தோல்வியிலேயே முடியும். ஜே.வி.பி. தானாகவே வேறெந்த தொழிற்சங்கங்களுடனும் கலந்தாலோசிக்காமல் 13,442 ரூபா சம்பள உயர்வைக் கோருவது மிகத் தவறானது. தொழிலாளி வர்க்க கட்சியென்று தனக்குத் தானே தம்பட்டமடித்துக் கொள்ளும் ஜே.வி.பி. முதலில் அரச சார்பற்ற ஏனைய அனைத்து தொழிற்சங்கங்களுடனும் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வந்திருக்க வேண்டும்.

வெறும் ஜம்பம் அடிப்பதால் மட்டும் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது. வேண்டுமானால், பாரிய தொழிற்சங்க நடவடிக்கை என்ற இந்த விபரம் தலைப்புச் செய்தியாக ஊடகங்களில் வெளிவரலாம். தேசத்தின் யதார்த்த நிலைகளை கவனத்தில் எடுத்துக்கொண்டு, சரியான சக்திகளை ஐக்கியப்படுத்தி ஒரு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதே வெற்றிக்கு வழிவகுக்கும். றோகண விஜேவீர ஜே.வி.பி.யின் தலைவராக இருந்த காலத்தில் தமிழ் மக்களின் சுயாட்சி பற்றி கதை கதையாகப் பேசினார். காலம் செல்லச் செல்ல ஜே.வி.பி. ஒரு கடும்போக்கு தேசிய சிங்கள நிலைப்பாட்டை எடுத்தது. ஒரு காலத்தில் தேசிய ஐக்கியம் பற்றியும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் பற்றியும் பேசிய இந்த ஜே.வி.பி. இன்று கடும்போக்கு சிங்கள நிலைப்பாட்டை எடுக்குமளவுக்கு தரம் தாழ்ந்து போயுள்ளது.

ஜே.வி.பி.இன் கடந்தகாலப் போராட்டங்கள் வெறும் துணிச்சல்வாத நடவடிக்கையாகவே முடிந்து போனது. நாட்டின் யதார்த்த நிலைமைகளை கவனத்தில் எடுக்காமல் சேகுவரா பாணியில் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முடியுமென்று சிறுபிள்ளைத்தனமாக ஜே.வி.பி. நினைத்தது. 1971இலும் 1988, 89களிலும் ஜே.வி.பி. நடத்திய ஆயுதக் கிளர்ச்சி சிறுபிள்ளை வேளாண்மையாகவே முடிவுக்கு வந்தது. பொலிஸ் நிலையங்களைத் தாக்குவதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமென்று நினைத்த ஜே.வி.பி. ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளின் அழிவுக்குத்தான் வழிவகுத்தது.

நாட்டின் யதார்த்த நிலைமைகளை எந்தவொரு ஆயுதக் குழுவும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். எதிரி யார்? நண்பன் யார்? ஐக்கியப்படுத்தக் கூடிய சக்திகள் என்ன? என்பவை பற்றியெல்லாம் சரிவரத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப கொள்கைகளை வகுத்துக்கொண்டால் மட்டுமே ஆயுதப் போராட்டத்தில் வெற்றி பெற முடியும் என்பது ஜே.வி.பி. தலைவர்களுக்கு புரிந்து கொள்ள முடியாமல் போனமை வேதனைதான். அரசு இயந்திரம் என்பது ஜனநாயக ரீதியாகவோ அல்லது இல்லாமலோ ஏற்படுத்தப்படும் அரசாங்கத்தின் காவல் நாய். அண்மைக் காலங்களில் அரபு நாடுகளில் ஏற்பட்ட வசந்தப் போராட்டங்கள் பல தலைவர்களின் தலைகளை உருள வைத்தது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆயுதக் கிளர்ச்சிகள் அவ்வப்போது ஏற்பட்டாலும் அவை வரலாற்றின் குப்பைக் கூடைகளுக்குள்தான் சங்கமமாகின.

நாட்டை உலுக்கிய தேசிய இனப்பிரச்சினை குறித்து சரியான நிலைப்பாட்டை எடுக்க முடியாத ஜே.வி.பியினால் தேசத்தின் தலைவிதியை என்றுமே நிர்ணயிக்க முடியாது.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com


# அமெரிக்காவின் ஊடக அரசியலும் அப்பாவி முஸ்லிம்களும்

தற்போது உலகெங்கும் உள்ள இஸ்லாமிய சமூகம் இணையதளத்தில் வெளியான ஒரு திரைப்படத்திற்கு எதிராகக் கொதித்தெழுந்திருக்கிறது. முகமது நபிகளை இத்திரைப்படம் இழிவாகச் சித்தரித்திருப்பதற்கு எதிராகத்தான் இப்போராட்டம். அத்திரைப்படத்தின் பெயர் அப்பாவி முஸ்லிம்கள். இத்திரைப்படம் பற்றிய விமர்சனத்தை எழுதிவிட்டு, இப்போராட்டத்தில் வெளிப்படும் ஆவேசத்தை சுட்டிக்காட்டுவதுடன் நின்றுவிடுகின்றன சில ஊடகங்கள். இதை வெறும் கிறிஸ்தவம் - இஸ்லாம் என்ற சமயங்கள் சார்ந்த மோதலுக்கான பிரச்சினையாகக் காட்ட முயல்கின்றன சில ஊடகங்கள். போராட்டத்தின் தன்மையை முன்வைத்து இஸ்லாமியர்களின் "சகிப்புத் தன்மை"யைக் கேள்விக்கு உட்படுத்துகின்றன. இத்தகையச் சூழலில் இப்பிரச்சனைக்குப் பின்புலமாக உள்ள அமெரிக்க அரசியலைச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.'

தற்போது பரபரப்பிற்கு உள்ளாகியிருக்கும் இத்திரைப்படம் YouTube இணையத்தில் வெளியானது. இது வெறும் 13 நிமிட முன்னோட்டத் (Trailer) திரைப்படம் மட்டுமே. இந்த 13 நிமிடத் திரைப்படம் மூட்டிய நெருப்புதான் இப்போது உலக அளவில் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. இதன் மூலத் திரைப்படம் இரண்டு மணிநேரங்களுக்கு உரியது. இந்த முழுத் திரைப்படமும் ஒரே ஒரு நாள் மட்டும் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள ஹொலிவூட்டின் ஒரு வாடகைத் திரையரங்கில் திரையிடப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு முறை மட்டுமே திரையிடப்பட்ட இப்படத்தைப் பார்த்தவர்கள் பத்துப்பேருக்கும் குறைவானவர்களே! மேலும், அப்போது விளம்பரத்திற்காக இத்திரைப்படத்திற்குத் தரப்பட்ட தலைப்பு என்ன தெரியுமா? Innocent Bin Laden (அப்பாவி பின்லேடன்). அப்படியானால், இதுதான் இத்திரைப்படத்தின் உண்மையான பெயரா என்றால், அதுவும் இல்லை. உண்மையில், இத்திரைப்படத்திற்கு தொடக்கத்தில் சூட்டப்பட்ட பெயர் Desert Warrior (பாலைவனப் போராளி). தற்போது பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கும் இந்த 13 நிமிட வீடியோ திரைப்படத்திற்கு முன்பாகவே, கடந்த ஜுலை 1ஆம் நாள் இதற்கான விளம்பரத் துண்டுப்படங்கள் யூடியூப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த விளம்பரத்தில் இப்படத்திற்கான பெயர் என்ன தெரியுமா? முகமதுவின் உண்மையான வாழ்க்கை (The Real Life of Muhammad).

படத்தின் தலைப்பிலேயே இத்தனை குளறுபடிகளா, எதுதான் உண்மையான தலைப்பு என்று யோசிக்கிறார்களா? சரிதான். பாலைவனப் போராளி - அப்பாவி பின்லேடன் - அப்பாவி முஸ்லிம்கள் - முகமதுவின் உண்மையான வாழ்க்கை - என்று தலைப்பு மட்டுமே பல அவதாரங்கள் எடுத்திருக்கிறன. தலையைச் சுற்றவைக்கும் தலைப்பு அரசியல் இது! ஆம், ஒரு நயவஞ்சகத்தின் ஆரம்பம் இது.

மூலப் படமான "பாலைவனப் போராளி"யில் கதை என்ன தெரியுமா? விண்வெளிக் கோள் ஒன்று பூமிக்கு இறங்கி வருகிறது. இதற்கு எதிராக பாலைவனத்து ஆதிவாசி மக்கள் போராடுகிறார்கள். ஆக, அறிவியல் கற்பனையின் அடிப்படையில் அமைந்த ஒரு படம் இது எனலாம். சரி, இதில் முகமது நபிகள் எப்படி வந்தார்? இதுதான் கதை அரசியல்! இந்த மூலப் படத்தில் மதத்தைப் பற்றியோ, குறிப்பாக, இஸ்லாத்திற்கு எதிரான குறிப்போ, முகமது நபிகளுக்கு எதிரான வசனங்களோ எதுவும் இல்லையாம். அப்படி எதுவும் இருப்பதாக அதில் நடித்த நடிகர்களே அறியவில்லை. படத்தின் இயக்குநர் ஆலன் ராபர்ட்ஸ் இதற்கு முன்பு மென்மையான ஆபாசப் படங்கள் தயாரித்தவராம். இப்படிப்பட்ட "தகுதிமிக்க" இவருக்கே இந்த வசனங்கள் எப்படிச் சேர்க்கப்பட்டன என்பது தெரியாதாம். பின் எப்படி நிகழ்ந்தது? படத்தின் கதையைவிட படம் எடுக்கப்பட்ட கதை மிகவும் திகிலாக இருக்கிறது.



இஸ்லாத்துக்கு எதிரான சிந்தனைகளும் முகமது நபிகளை இழிவுபடுத்தும் வசனங்களும் திரைப்படத்திற்கான பிந்தைய தயாரிப்புப் பணிகளில் (Post production) "டப்பிங்" முறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதாவது, நடிகர் ஒரு வசனத்திற்கு வாயசைத்துக் காட்சியைப் பதிவு செய்ய, டப்பிங் கலைஞர் வேறெரு வசனத்தைப் பேசிப் பதிவு செய்திருக்கிறார். மிகப் பெரிய சதித்திட்டம் முறைப்படி அரங்கேறியிருக்கிறது. ஆக, அறிவியல் கற்பனைக் கதையில் மத அரசியல்! கொஞ்சம் அசந்தால், பாட்டி வடை சுட்ட கதையில்கூட மத அரசியலைத் திணித்துவிடுவார்கள் போலிருக்கிறது! இவ்வாறு டப்பிங் முறையில் தயாரிக்கப்பட்ட 13 நிமிட முன்னோட்டத் திரைப்படத்தில்தான் இஸ்லாத்திற்கு எதிரான பல கூறுகளை அள்ளித் தெளித்திருக்கிறார்கள். இந்த முன்னோட்டத்தைத்தான் யூடியூப்பில் பதிவேற்றம் செய்திருக்கிறார்கள். இந்தப் பதிவிறக்கம்தான் உலகமயமாகி தற்போது பற்றி எரிந்துகொண்டிருக்கிறது.

இப்பிரச்சினை வெடித்தபிறகு, இப்படத்தை இயக்கிய ஆலன் ரொபர்ட்ஸ் என்பவரும், நடித்த பிற நடிகர்களும் தாங்கள் ஏதோ சூழ்ச்சிக்குப் பலியாகி விட்டதாகக் குறிப்பிடுகிறார்கள். அதாவது, படத்தின் இயக்குநரையே வேறு யாரோ இயக்கியிருக்கிறார்கள். ஏதோ விட்டாலாச்சாரியார் படம் பார்த்த மாதிரியாக அல்லவா இருக்கிறது! நடித்தவர்களுக்கு தங்கள் கதாப்பாத்திரத்தின் தன்மை என்னவென்பது தெரியாமல் அவர்களைச் சிக்க வைப்பதும், தான் ஒரு சூழ்ச்சிக்குப் பலியாகிவிட்டதாக இயக்குநர் குறிப்பிடுவதையும் மிகப் பெரிய அறநெறி மீறலாகவே கருதவேண்டும். அப்படியானால், அந்த சூத்திரதாரி யார்?

இக்கேள்விக்கான பதிலில்தான் அமெரிக்காவின் அரசியல் அடங்கியிருக்கிறது.

இப்படத்தைத் தயாரித்தவர் சாம் பகைல். இவர் பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி சிறைத்தண்டனை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பகைல் "ரியல் எஸ்டேட்" தொழில் செய்துவந்த ஓர் இஸ்ரேலியர். இந்தப் படத்திற்கான தயாரிப்புச் செலவை 100இற்கும் மேற்பட்ட யூதர்களிடமிருந்து வசூலித்திருக்கிறார். இவர்கள் எல்லாம் இஸ்ரேலின் ஆதிக்கத்தை வலியுறுத்தும், இஸ்லாத்தை எதிர்க்கும் "சீயோன்" அமைப்பைச் சார்ந்தவர்கள். இந்தத் தகவலை எரியும் பிரச்சனையோடு தொடர்புபடுத்தினால், அமெரிக்க - இஸ்ரேல் - பாலஸ்தீனம் - முஸ்லிம் என்ற அரசியல் பரிமாணம் நம் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. வெறும் பத்துப் பேருக்கும் குறைவானவர்கள் திரையரங்கில் பார்த்தத் திரைப்படத்தை, இணையத்தில் வெளியிட்டுப் பரபரப்பாக்கி வசூல் வேட்டை செய்துள்ள இவர்களின் வியாபாரத் தந்திரத்தையும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

இப்படங்களை அரசு தணிக்கை செய்யவில்லையா என்ற கேள்வி எழலாம். கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் இத்தகையத் திரைப்படங்கள் அமெரிக்காவில் நம் நாட்டைப் போன்று தணிக்கை செய்யப்படுவது கிடையாது. அமெரிக்காவில் தணிக்கை செய்யும் பொறுப்பை ஒரு தனியார் அமைப்பு செய்து வருகிறது. இவர்களது வேலை என்னவென்றால், எந்தத் திரைப்படத்தை எந்த வயதினர் பார்க்கலாம் என்பதை வரையறுத்துச் சான்றிதழ் வழங்குவது மட்டுமே. அது நல்ல படமா?, கெட்ட படமா? என்று தீர்மானிக்கும் வேலை எல்லாம் அவர்களுக்குக் கிடையாது.

(7ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்துக்கு அதிக விலை கொடுத்தவர்கள் பெண்களே!



யோ.ஷாலினி

போரும் அது விளைவிக்கும் அழிவுகளும் பல்வேறு வழிகளில் ஒவ்வொரு மனிதனுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இங்கு ஆண், பெண், சிறுவர், முதியவர் என்கின்ற எந்தவித வேறுபாடின்றியும் அனைவரையுமே யுத்தம் தாக்கியுள்ளது. நடந்து முடிந்த யுத்தம் அவலத்தின் உச்சத்தை தொட்டு நிற்கின்றது. இன்று வடக்கில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது.

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு யுத்தம் மட்டும் காரணமல்ல, பல்வேறுபட்ட காரணங்களில் போரும் ஒரு காரணமாகியுள்ளது. இவ்வாறான பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

முதலில் இவ்வாறான குடும்பப் பெண்கள், பல்வேறு தரப்பினராலும் வன்முறைக் கொடூரங்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் பல்வேறு இடங்களில், பல்வேறு வடிவங்களில் இடம்பெறுகின்றன.

வேலைத்தலங்கள், பொதுஇடங்கள், வீடு, பாடசாலை என்பனவற்றிலும் உடல், உள ரீதியில் பெண்கள் பாதிப்பை எதிர்நோக்குகின்றனர்.

அதுமட்டுமின்றி யுத்தம், யுத்தத்தின் பின்னரான அகதி வாழ்வு, தொழிலொன்றை மேற்கொள்ள முடியாமை, நலன்புரி முகாம்களில் வாழ்தல், சொந்த குடியிருப்புக்களை இழந்து பொருளாதார வளமின்றி அவதியுறல் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

யுத்தத்தின்போது கணவன் இறந்து அல்லது காணாமல் போய்விட்ட சம்பவத்தில், அக்குடும்பத்தை எதிர்காலத்தில் நடத்திச் செல்கின்ற பொறுப்பு அப்பெண்ணின் தலையில் சுமத்தப்படுகிறது. இக் குடும்பத்தின் சுமை அவளிடம் பெரும் பாரமாக அவள் மீது இறக்கப்படுகின்றது.



யுத்தத்தின் காரணமாக இளவயதுத் திருமணம் என்பது அதிகரித்து காணப்பட்டது. தமது பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு அக்காலகட்டத்தில் ஏற்பட்டதன் காரணமாக அன்று அவர்களால் தமது பிள்ளைகளின் வயதைக் கருத்திற்கொள்ளாமல் திருமணம் செய்துவைத்தார்கள். அன்று அவர்களால் அதைத்தான் செய்ய முடிந்தது.

இன்று அந்த இளவயதுப் பெண்கள் தமது கணவன்மாரை இழந்தும், பிள்ளைகளை வளர்ப்பதற்கும் கூட துணையிழந்து தாமும் விதவைகள் எனும் முத்திரை குத்தப்பட்டு சமூகத்தில் ஏதிலிகள் ஆக்கப்பட்டுள்ளார்.

இவர்களுடைய பாதுகாப்பே முதற் பிரச்சினையாக உள்ளது. குறிப்பாக வன்னிப் பகுதியில் குடியேற்றத் திட்டங்கள் நெருக்கமாக அமைக்கப்படவில்லை. ஒவ்வொரு தனி வீட்டுக்கும் இடையில் நீண்ட இடைவெளி உள்ளது. ஐந்து அல்லது பத்து ஏக்கர் காணி ஒவ்வொருவருக்கும் சொந்தமாக-ின்றது. எனினும் இவர்களுடைய பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

இவர்கள் செய்யும் தொழில்களில் கிடைக்கும் ஊதியம் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆணும் பெண்ணும் இணைந்து சமமான ஒரே வேலையைச் செய்தாலும் இருவருக்கும் வெவ்வேறான ஊதியமே வழங்கப்படுகின்றது. சில தொழில்களைப் பொறுத்தவரை ஆண்கள் தமக்கென ஒரு சூழலை உருவாக்கி அந்தத் தொழில் ஆண்களுக்குரியது என வரம்பிட்டுள்ளனர். இவ்வாறு தமது குடும்பத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய அளவிற்கு அந்தப் பெண்களிம் பொருளாதார பலமின்மையானது அவர்களுக்கு உளவியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இதனால் அவர்கள் காத்திரமற்ற தவறான முடிவுகளை எடுக்க எத்தனிக்கின்றனர்.

இதனால் இவர்கள் மட்டுமன்றி முழுக் குடும்பமுமே அல்லலுறும் நிலைக்கு செல்கிறது. பிள்ளைகளின் கல்வி சீர் குலைகிறது. அவர்கள் சமூகம் ஏற்றுக்கொள்ளமுடியாத தவறான செயற்பாடுகளுக்கு இட்டுச் செல்லப்படுகிறார்கள்.

ஒரு பெண் கணவனை இழந்துவிட்டால் அவள் சமூகத்தின் பார்வைக்கு விதைவயாகிறாள்.

போட்டு, பூ என்பன மட்டுமல்ல வாழ்க்கையின் பல சந்தோஷங்களும் அவளிடமிருந்து விலகிச் செல்கிறது. அதேநேரம் ஆண் எனில் அவ்வாறு சமூகத்தால் பார்க்கப்படுவதில்லை.

ஆரம்பத்தில் கூட்டுக்குடும்ப வாழ்வில் வாழ்ந்தவர்கள் யுத்தத்தின் பின்னர் அசாதாரண சூழ்நிலையில் தனித்துவிடப்படுகின்றனர். அல்லது புரிந்துணர்வின்மையால் குடும்பத்தினரிடையே விரிசல்கள் ஏற்படுகின்றன. இவர்கள் வாழ்க்கையில் நிம்மதி என்ன விலை? ஏனக் கேட்கும் அளவுக்கு நிம்மதி தொலைக்கப்படுகின்றது.

பெண்கள் குடும்பத்தை பொறுப்பேற்பதென்பது கணவனின் இறப்பு மட்டுமன்றி, விவாகரத்து, பிரிந்து வாழ்தல், கணவன் தொழில் மேற்கொள்ள முடியாதவராக இருத்தல், சட்டப்படி விவாகப் பதிவு செய்யாது குடும்பத்தின அமைப்பை ஏற்று நடத்தல், கணவன் தொழில் ரீதியான வெளியூர் பயணம் என பல்வேறு காரணங்களாக அமைகின்றன.

எவ்வாறிருப்பினும் இவ்வாறான பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

அதாவது, தனித்து வாழ்தல், பொருளாதார என்பனவெல்லாம் மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுக்கின்றன.

இவ்வாறு குடும்பத் தலைவனை ஏதோ ஓர் வகையில் இழந்த பெண்களின் மறுவாழ்வு என்பது முக்கியமானது.

இதனை தாம் அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும். பெண்களின் துணிவு, தன்னம்பிக்கை, உறுதியான தன்மை என்பனவற்றை ஏற்படுத்தி பெண்களின் நிலையினை உயர்த்துவது அனைவரின் கடமையாகும். பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கான நம்பிக்கை ஒளியூட்டுவது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

# அமெரிக்காவின் ஊடக அரசியலும்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால்தான், பதிவேற்றம் செய்யப்பட்ட யூடியூப் இணையத்தை இப்பிரச்சினையில் தங்களால் கட்டுப்பட்டுத்த இயலாது என்று கையை விரிக்கிறது அமெரிக்கா.

இந்தத் திரைப்படத்தை இஸ்லாத்திற்கு எதிரான கருத்தியல் மோதல் என்று வெறுமனே எடுத்துக்கொள்ள முடியாது. முகமது நபிகளை போலியான சமயவாதியாகவும், முட்டாளாகவும், காமுகனாவும் சித்தரித்திருக்கிறார்கள். கழுதையைப் பார்த்து "முதல் முஸ்லிம் விலங்கு" என்கிறார்கள்.

என்னதான் இஸ்லாத்தின் கருத்தியலை கருத்துரிமையோடு விமர்சிக்கிறோம் என்று சமாதானம் சொன்னாலும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வன்மம், காழ்ப்புணர்ச்சி, பகைமை, வக்கிரம் ஆகியவையே இத்தகையக் காட்சிகளில் மேலோங்கி இருக்கின்றன. முகமது நபிகளை ஒரு சித்திரமாகவோ, நிழல்படமாகவோ, கற்பனை ஓவியமாகக்கூடப் பார்க்க விரும்பாது, அவரை மனதில் ஏற்றி வைத்திருக்கும் இஸ்லாமியச் சமூகத்திற்கு இத்திரைப்படம் மிகப் பெரிய அதிர்ச்சியை அளித்திருக்கும் என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

சமயம் குறித்த நேர்மறையான விவாதத்திற்குள் அல்லது கலந்துரையாடலுக்குள் இறங்காமல், சமயரீதியான உளவியலைக் காயப்படுத்தி, உணர்வுத் தளத்தைச் சீண்டிப்பார்த்துக் குளிர்காயும் அமெரிக்காவின் வக்கிர அரசியல் இதில் இழையோடுகிறது.

இவ்வளவு பெரிய ஏகாதிபத்தியப் பின்புலத்தைக் கொண்ட இப்பிரச்சினையை, ஒரு படைப்பாளியின் தனிப்பட்ட கருத்துச் சுதந்திரம் என்ற கோணத்திலும் நாம் எடுத்துக்கொள்ள முடியாது. அமெரிக்காவின் ஊடக அதிகாரம் என்பது குறிப்பிட்ட இஸ்ரேல் சமூகத்தைச் சார்ந்தவர்களிடமே அதிகமாக உள்ளது என்று பல புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இஸ்ரேல் - அமெரிக்க உறவு அரசியலைத் தவிர்த்துவிட்டு, இந்தக் கருத்துச் சுதந்திரத்தைப் பேச முடியுமா? மேலும், ஊடகங்களில் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் தொடர்ச்சியாக ஒரு சில சமூகங்கள் மட்டுமே தாக்குதல்களுக்கு உள்ளாகி அவமானப்படுத் தப்படுவது எப்படி?

கருத்துச் சுதந்திரத்திற்கு முன்பாக, ஊடக வலிமை, ஊடக அதிகாரம் என்பன யார் கையில் இருக்கின்றன என்பதே இன்றைய கேள்வி. அமெரிக்காவுக்கு இணையாக ஊடகங்களை, குறிப்பாக, சமூக இணையதளங்களை ஆக்கிரமிக்கும் அதிகாரம் இஸ்லாமிய நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் இல்லை எனலாம்.

அந்த வகையில், அத்தகைய அதிகாரமும் வலிமையும் குறைவாகக்கொண்ட மக்கள்மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவது என்பது நிராயுத பாணி மீது நடத்தும் தாக்குதல் தானே !

இதில் ஊடகம் ஏற்படுத்தும் தாக்கம்தான் நாம் அதிகம் கவனத்தில் கொள்ளத்தக்கது. திரைப்படம் என்பது திரையரங்கில் மட்டுமே பார்க்கக்கூடிய காலமெல்லாம் மலையேறிப் போய்விட்டது. இன்றைக்கு இணையத்தில் யூடியூப்பின் பயன்பாடு மிகப்பெரும் வீச்சைக் கொண்டது. இதனால்தான், இஸ்லாம் மீதான கட்டுடைப்பை இப்படம் முன்வைக்கிறது என்பதைவிட, நொடியில் ஒரு பரப்புரை நடந்துவிடுகிறது என்பதே இப்பிரச்சனையின் மையம். இஸ்லாமியர்களின் காயப்பட்ட உணர்வு என்பது ஒருபுறமிருக்க, இஸ்லாமியர் அல்லாத மக்களிடம், குறிப்பாக இளைஞர்களிடம், இஸ்லாம் பற்றி நடந்த பரப்புரைக்குப் பதில் என்ன என்பதே இப்பிரச்சினையின் வேகத்தை அதிகரித்திருக்கிறது. இத்திரைப்படத்தை இணையத்தில் பார்த்தவர்கள் அத்தனை பேரும் இந்த அமெரிக்க ஊடக அரசியலைப் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. ஊடக அதிகாரத்தின், வலிமையின் மையப் புள்ளி இந்தப் பரப்புரையில்தான் அடங்கியிருக்கிறது.

ஆதிக்க ஊடகங்கள் பரவலாகப் பயன்படுத்தும் ஒரு சொற்றொடர் - இஸ்லாமியப் பயங்கரவாதம். ஊடகங்களின் பயன்பாட்டில் இருந்த சொற்கள் இன்றைக்கு சமூகத்தின் பொதுச் சிந்தனையில் விதைக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கருத்தியலை பொதுச் சிந்தனையில் உள்வாங்கிக் கொண்டவர்களுக்கு, இத்திரைப்படம் ஒரு வலுவூட்டலாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

இவை எல்லாவற்றையும்விட, இன்று அமெரிக்கா சந்தித்துக் கொண்டிருக்கும் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுப் பிரச்சினைகளைத் திசை திருப்பி விட்டிருக்கிறது இந்தப் பிரச்சினை.




# சஞ்சலம் தீர்க்கும் சக்கர ஆழ்வார்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டதாக வல்லிபுர ஆழ்வார் ஆலயம் விளங்குகின்றது.

வல்லியதேவன் எனும் அதிகாரி நிர்வாகம் செய்த இடம் என்பதாலும், இந்தியாவில் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வல்லிபுரம் எனும் விஷ்ணு ஆலயம் சார்ந்ததாலும், பூமிதேவி எனப் பொருள்படும் வல்லி என்பவள் மஹாவிஷ்ணுவைப் பூசித்த இடமென்பதாலும் இலவல்லியின் தவத்தால் உருவாகியது என்பதாலும், வல்லிபுரம் எனும் பெயர் வழங்கப்பட்டு வருகின்றது.

கி.பி.15ஆம் நூற்றாண்டில் கோகிலசந்தேஸ எனும் குயில்விடு தூதாகிய சிங்களகாவியத்திலும் சிங்கைநகர் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தட்சிணகைலாய மான்மியத்தில் வல்லிபுரமும் பொன்னாலையும் புகழ்ந்துரைக்கப்படுகிறது. இலவல்லி என்ற பெண் புத்திர பாக்கியம் வேண்டி வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமாடும் வங்கக் கடற் கரையில் தவம் செய்து கொண்டிருந்தாள். ஒருநாள் கடல் அலைகள் மிகப் பரந்த உயரத்திற்கு உயர்ந்தது. மீன் ஒன்று அலைக-ளின் மத்தியில் உயரத்திற்கு துள்ளித்துள்ளி விளையாடியது. ஒரு கட்டத்தில் தவத்திலிருந்த வல்லியின் மடியில் மீன் வந்து விழுந்தது. அது, சற்று நேரத்தில் குழந்தை வடிவம் எடுத்தது. விஷ்ணு மீன் அவதாரம் எடுத்தவர். பின் கிருஷ்ண அவ தாரத்தில் எல்லோரும் போற்றும் குழந்தைக் கண்ணனாகவும் அவதாரம் எடுத்தவர். இது தெய்வீகம் என்பதை உணர்ந்த மீன வர்கள் ஒரு பல்லக்கில் குழந்தையைத் தாங்கி ஊர்ப்பக்கமாக மணல் மலைகளைத் தாண்டி வந்தனர். தற்போது ஆலயம் அமைந்திருக்கும் பகுதியில் பல்லக்கை இறக்கி வைத்து மரநிழலில் இளைப்பாறியவேளை குழந்தை சக்கரமாக மாறியது மட்டுமன்றி அதனை யாருமே தூக்க முடியாமல் போய் விட்டது. மீண்டும் பிராமண வடிவத்தில் தோன்றிய நாராயணன், "எல்லாப் படைக்கலங்களிலும் சிறந்தோங்கும் சக்கராயுதத்தை பேரன்போடு வழிபட்டுவந்தால் விரும்பிய எல்லாவற்றையும் பெறுவீர்கள்" எனக் கூறி மறைந்தார். அன்று முதல் இங்கு வழிபாடு ஆரம்பமாகியது. காலத்துக்குக் காலம் ஆலயம் கட்டடங்களோடு வளர்ந்தாலும் போத்துக்கேயர் இவ் ஆலயத்தையும் உடைத்து அழித்தார்கள். ஆனால் மனக்கோயிலில் வைத்து வழிபட்ட பரந்தாமன் அடியார்கள், மீண்டும் ஆலயம் அமைத்து சக்கரத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார்கள்.

இந்த வல்லிபுரத் தலமானது விஷ்ணு மூர்த்திக்கு உவப்பைக் கொடுக்கின்றது. வைகுண்டபதத்தில் அனுபவிக்கும் முத்தி இன்பத்தைக் கொடுக்கத்தக்கதும் என்பதாக வல்லி புர மான்மியம் "வல்லிபுர மஹா சேத்திரம் வைக்குண்ட ப்ரீதி தாயகம்" என கூறுகிறது. விஷ்ணுவை அவனது வலது கையில் இருக்கும் சக்கர வடிவில் வழிபடும் மரபு காணப்படுகின்றது. இந்த சக்கரம் சுதர்சனம் எனும் பெயரால் அழைக்கப்படுகின்றது.

விஷ்ணுவின் வலது மேற்கையில் எந்நேரமும் சுழன்று கொண்டிருக்கும் ஆழியாகிய சுதர்சன சக்கரமானது எமது வாழ்க்கைச் சக்கரம் தங்கு தடையின்றிச் சுழன்று கொண்டிருப்பதைக் குறிக் கும். எனவே சக்கரத்தை வழிபாடு செய்பவர் களது வாழ்க்கை சஞ்சலமற்று சீராகச் சென்று கொண்டி ருக்கும்.

விஷ்ணுவின் முதல் அவதாரமாகிய மச்சத்தில் இருந்து சுயமாகத் தோன்றிய சக்கரமே இன்றும் மூலமூர்த்தியாகவும் எழுந்தருளி மூர்த்தியாகவும் வல்லிபுரத்தில் வழிபடப்படுகின்றது.

சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசன்.

ஸ்ரீகிருஷ்ணா
கிறீம் ஹவுஸ்
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
தேரேறி வந்து எங்கள் துயர் நீக்கி காத்தருள்வாய்!



## அருள்மிகு வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பிரதம குருமார்களின் ஆசிச்செய்தி







எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீ வல் லிபுர சக்கர மாயவன் தாழ் பணிந்து, சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ வல்லிபுரக் கோயிலின் நந்தன வருட மகோற்சவம் சென்ற ஆவணி 29ஆம் நாள் (14.09.2012) வெள்ளிக்கிழமை ஐந்தொழிலில் ஒன்றான படைத்தல் தொழிலின் காரணமான கொடி யேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி, காத் தல் தொழிலின் நிமித்தமான வீதிவலம் வந்து அருளும் தூய்மையான திருவிழாக் கள் இனிதே நடைபெற்று, எம்பெருமா னின் சம்காரத் தொழிலின் நிமித் [illegible] இரதோற்சவம் இன்று (வெள்ளிக்கி [illegible] நடைபெறுகின்றது. ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவம் என்னும் கொடிய மலத்தை அழித்து தூய்மைப்படுத்துவது தான் அதன் தாற்பரியமாகும்.

நாளை தினம் வரலாற்றுடன் தொடர்பு டைய கடல் நீராடல் தீர்த்தமும் நாளைய மறு தினம் (ஞாயிற்றுக்கிழமை) அருளல் தொழிலின் நிமித்தமான தீர்த்தத் திரு விழாவும், கொடியிறக்கத்துடன் மறைதல் தொழிலின் நிமித்தமான திருவிழாவும் நடைபெறும். இந்த நாட்களில் ஆலயத்திற்கு வந்து தரி சிக்கும் அடியவர்கள் அனைவரும் எம்பெருமானின் நல்லரு ளைப் பெறுவார்கள் என்பது திண்ணம். எம்பெரு மானை நினைந்து வழிபடும் அனைவர்க்கும் எல்லாம் வல்ல வல் லிபுர மாயவனின் நல்லருளும் எமது நல்லாசிகளும் உரித்தாகுக.

நாட்டினர் அனைவரும் சமாதான சகவாழ்வுடனும் நீடித்த அமைதியுடனும், சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வைப் பெற வாழ்த்தி எம்பெருமானைப் பணிகின்றோம். சுபம்!

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்கசனக் குருக்கள் (பிரதம [illegible]),
பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக் குருக்கள் (பிரதமகுரு),
பிரம்மஸ்ரீ சுதர்சன கணபதீஸ்வரக்குருக்கள் இளைய குரு).
( மகோற்சவ குரு.



RAINBOW TILES STORES
றெயின்போ ரைல்ஸ் ஸ்ரோர்ஸ்
பருத்தித்துறை வீதி, சிலையடி, மந்திகை
தொ.பே.: 021 2262696, 0778695418
ஓடு, சீற் வகைகள், பெயின்ற் வகைகள், எஸ்லோன் பி.வி.சி.பைப் வகைகள், கட்டடப் பொருட்கள், விவசாய மருந்து வகைகள் துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் மின்சாரப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.
இன்று தேரில் ஏறி அருள் பாலிக்கும் மாயவனுக்கு போற்றி! போற்றி!! போற்றி!!!




புவி ஸ்ரோர்ஸ் (பல்பொருள் வாணிபம்)
சிலையடி, மந்திகை தொ.பே : 077 1456519
வல்லிபுர ஆழ்வாரே எம்மை காத்தருள்வாய்!



பவிசாரு பூங்கனிச் சோலை PAVISHARU POONGANI SOOLAI
*பழமரங்கள் *பயன்தருமரங்கள் *நாற்றுக்கள் *அலங்காரத்தாவரம்
*சாடிகள் *மருந்துவகைகள் *பசளைகள் *மூலிகைகள் *மரக்கறி விதைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
Mob: 071 8475629, Tel: 021 2228199
311/ 1, பலாலி வீதி, கோண்டாவில் சந்தி, கோண்டாவில்.

# ஆழ்வார் தேவஸ்தான
# மலர்- 28.09.2012



## அற்புத நிகழ்வுடன் தோற்றம்பெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

உலகில் தர்மத்தை நிலைநாட்டி மக்களை நல்வழிப் படுத்தும் வகையில் திருமால் எடுத்து வந்த அவதாரங் களுள் ஒன்பதாவதாக அமைந்திருப்பது தான் கிருஷ்ணா வதாரம். வாசுதேவர்- தேவகி மைந் தனாக ஆவணி மாதத்து அட்டமி திதியுடன் சேர்ந்த ரோகிணி நட்சத்திர நாளில் கிருஷ்ண பகவான் அவதாரம் செய்தார். ஆயர்பாடியில் வளர்ந் தமை, வெண்ணெய் உண்டமை, பசுக்களைக் காத்து மேய்த்தமை, பாண்டவர்களுக்காக தூது சென்றமை, போர்க்களத்தில் அருச்சுன னுக்கு தேர்ச்சாரதி யாக இருந்தமை, பகவத்கீதை, அருளியமை முத லான பலவகையான செயல்கள் கிருஷ்ணபகவானின் அற்புத நிகழ்வு களாய் போற்றப்படுகின்றன.

படைத்தல், காத்தல், அழித்தல் எனப்படும் முப்பெரும் தொழில்களுள் காத்தல் தொழிலை செய்து வருகின்ற கடவுளாகப் போற்றப்படுபவர் கிருஷ்ண பகவான்.

*"எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது*
*எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது*
*எது நடக்க இருக்கிறதோ,அதுவும் நன்றாகவே நடக்கும்"*

என பகவத் கீதையில் சொன்னதுபோல, அடியார்களை காப்பதுடன் நின்றுவிடாமல், நடப்பதெல்லாம் நல்லனவாக அமையும் வகையில் அருள்பாலித்து வரும் கிருஷ்ண பகவான் பல வடிவங்களில் போற்றித் துத்திக்கப்பட்டு வருகிறார்.

தசாவதாரச் சிறப்பைச் சொல்லும் ஆழ்வார் பாசுரங் களைப் படைத் தவர்களுள் ஒருவரான தொண்டரடிப்பொடி ஆழ்வார் தனது பாசுர மொன்றில்

*"பச்சை மாமலை போல்மேனி பவளவாய் கமலச் செங்கண்*
*அ[illegible] அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்*
*இ[illegible]வை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்க மாநகரு ளானே"*

என்று கிருஷ்ண பகவானை சிறப்பித்துப் பாடியிருக்கிறார்.

ஒரு கையில் சங்கும், மறு கையில் சக்கரமும் தாங்கி காட்சி தரும் கிருஷ்ண பகவானின் கையிலுள்ள சக்கரமா னது சுழன்று சென்று பகை வரை அடக்கும் ஆயுதமாக வல்லமை படைத்தது. இத்தகைய சக்தி வாய்ந்த சக்கரமே கர்ப்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதன் ஊடாக, கிருஷ்ண பகவான் சக்கர ஆழ்வாராக எழுந்தருளியிருக்கும் சிறப்பிற்குரியதாக வல்லிபுரம் ஆழ்வார் திருத்தலம் விளங்குகிறது.

திருமாலை முழுமுதற்கடவுளாகக் கொண்டு வழிபாடாற்றும் வைண வம் சார்ந்த வைகாச ஆகம விதிமுறைகளுக்கு அமைந்த ஆலயங்கள் இலங்கையில் குறைந்தளவே இருக்கின்றன. இந்த வகையில் யாழ்ப் பாண மாவட்டத்தில் வல்லிபுரம் ஆழ்வார் ஆலயம், யாழ்ப்பாணம் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் என்பன நீண்டகாலம் வரலாற்றுப் பெருமையுடன் பிரசித்தி பெற்றவையாக திகழ் கின்றன. யாழ்.குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் பாக்கு நீரிணை சார்ந்த வல்லிபுரம் என்ற பசுமைமிக்க விருட்சங்கள் சூழ்ந்தமைந்த இடத்தில் இந்த ஆழ்வார் திருத்தலம் அமைந்துள்ளது. தொன்மையும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கேய மைந்த சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டது இவ்வாலயம்.

*"மூர்த்தி யருளும் முறைசேர் தலநலமும்*
*தீர்த்தத் திருநிறைவும் சேருமருட்- கீர்த்திமிகு*
*நல்லவோர் ஆலயத்தை நாடிநான் போற்றுதற்*
*கல்லே னின்றா னேயறி"*

என தல மகிமையை கருடாழ்வார் சிறப்பித்துச் சொல் கிறார். வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தைப் பற்றிய வர லாற்றுக் குறிப்பு கள் தட்சிண கைலாச புராணம், தட்சின கைலாச மான்மியம் போன்ற நூல்களில் காணப்படுவ தாகவும், சிங்கள மொழியினாலான புழும்பெரும் இலக்கியங்களிலும் ஆலய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கியி ருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்த ஆலயத்தின் புராதன சிறப்புக்கும், புனித தன்மைக்கும் இது ஒரு சான்றாதாரமாக அமைந்திருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம். விஷ்ணு வழிபாடு சிங்கள பௌத்த மக்களிடையேயும் பிரபல்யம் பெற்று விளங் குகிறது. பௌத்த ஆலயங்களிலும் விஷ்ணுவின் திருவுருவச் சிலை வைக்கப் பட்டிருப்பது இதற்கு ஆதாரமாகும்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயம் தோற்றம் பெற்றதற்கு ஒரு அற்புத நிகழ்வே காரணமாக இருந்ததாக சொல்லப்படு கின்றது. பருத்தித்துறை புலோலி கிராமத்திலுள்ள வராத்துப்பழை என்ற இடத்தில் வசித்து வந்த வல்லி நாச்சியார் என்ற அம்மையார் நீண்ட காலமாகவே குழந்தைச் செல்வமின்றி இருந்தவர். கிருஷ்ண பகவானிடம் தமது குறையைத் தெரிவித்து வேண்டுதல் செய்து வந்தவர். ஒருநாள் இவரது கனவில் தோன்றிய பகவான், கற் கோவளம் கடற்கரைக்கு வரும்படி கட்டளையிட் டிருந்தார். அம்மையாரும் அவ்விதமாகவே குறிப்பிட்ட இடத் திற்குச் சென்று கிருஷ்ண பகவானை தியானித்தபடி அமர்ந்திருந்தார்.

அப்போதுதான் ஆச்சரியமான நிகழ்வொன்று இடம் பெற்றது. கடலில் அலைநடுவே துள்ளி விளையாடிய மச்ச மொன்று (மீன்) அம்மையாரின் மடியில் வீழ்ந்து குழந்தை யாகியது. உடனடியா கவே குழந்தை ஸ்ரீசக்கர வடிவமாக மாற்றமடைந்தது. அம்மையாரின் வேண்டுகோளின் பேரில் அந்த ஸ்ரீ சக்கரம் ஒரு பல்லக்கில் வைத்து கிராமத்திற்கு எடுத்துச் செல்லும் வழியில் நீர் அருந்து வதற்காக ஓரிடத்தில் இறக்கிவைத்துவிட்டு, மீண்டும் பல்லக்கை தூக்குவதற்கு முயற்சித்தபோது அதனை எடுக்க முடியாமற் போய்விட்டது. இதுவே இப்பொழுது பெரும் இராஜகோபுரத்துடன் காட் சிதரும் வல்லிபுர ஆழ்வார் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இடமாகும். இந்த அற்புத சம்பவ நிகழ்வு செவிவழித் தகவலாகவே பேணப் பட்டு வந்துள்ளது. அத்துடன் இந்த நிகழ்வு பற்றி பலவாறாகவும் சொல்லப்படுகின்றது.

மகாத்மா காந்தி இலங்கைக்கு வந்தபோது, வல்லிபுர ஆழ்வார் ஆல யத்திற்கு வந்து தரிசனம் செய்ததாகவும் சொல்லப்படுகின்றது. யாழ். மாவட்டத்திலுள்ள இந்து மக்கள் மட்டுமல்ல வெளி மாவட்டங்களிலி ருந்து வருபவர்களும் இங்கு வந்து தரிசனம் செய்வது வழக்கம். குறிப் பாக மகோற்சவ காலத்தின்போது பெருமளவு பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தருவார்கள்.

இங்கு புரட்டாதி மாதத்தின் பூரணை நாளன்று தீர்த்த மாகக் கொண்டு வருடாந்த மகோற்சவம் நடைபெறுவது வழக்கமாகும். இங்கு நடைபெறும் சமுத்திரத் தீர்த்தம் மகத்துவம் வாய்ந்தது. சக்கரத்தாழ்வார் கடலை நோக்கிச் சென்று தீர்த்தமாடிவிட்டு வருவது நீண்டகாலமாகவே நடந்து வரும் பக்திபூர்வமான நிகழ்வாகும். மச்ச உரு என்று சொல் லப்படும் மீன் வடிவில் காட்சி கொடுத்து குழந்தையாகி பின்னர் ஸ்ரீ சக்கர வடிவம்பெற்ற ஆழ்வாரின் தோற்றத்திற்குரிய இடமான (சமுத்திர) நீர் நிலையில் தான் இப்போது தீர்த்தோற்சவம் நடைபெற்றுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வருட மகோற்சவம் இம்மாதம் 14ஆம் திகதியன்று கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது. இன்று (வெள்ளிக்கிழமை) இரதோற்சவமும், நாளை (சனிக்கிழமை) சமுத்திரத் தீர்த்தோற்சவமும், நாளை மறுதினம் (ஞாயிற்றுக்கிழமை) கேணித் தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது.

– அ.கனகசூரியர்.

### மனித வாழ்வு வளம்பெற தேரேறிவரும் கிருஷ்ண பகவான்



தர்மம்குன்றி அதர்மம் மேலோங்கி நிற்கும் வேளையில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக கிருஷ்ணபகவான் யுகம் தோறும் அவதாரம் செய்கின்றான். அவனது அவதாரம் துஷ்டரை அழிக்கவும் நல்லோரைக் காக்கவும் வழிவகுப் பது டன், தர்மமே இறுதியில் வெல்லும் என்பதையும் உல குக்கு உணர்த்தி நிற்கிறது.

இவ்வகையில் தனது காத்தல் தொழிலை செவ்வனே நிறை வேற்றும் வண்ணம் வடமராட்சியின் வல்லிபுரப் பகுதியில் தானே விரும்பியுறைந்து அருள்பாலித்து வரும் கிருஷ்ண பக வான் இன்று ரேரேறி வந்து நயனதீட்சையால் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் அருங்காட்சியை காண்போர் சகல செல்வங்களும் பெற்று இனிய வாழ்வு பெறுவர்.

மகோற்சவங்களில் தேர்த் திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கிறது. தர்மம் நிலைபெறுவதற்காக அதர்மத்தை அழிக் கப்புறப்படும் நன்னாள் தேர்த் திருவிழாவாகும். மனிதத் தன்மை மேலோங்கும் இந்த நாளிலே, கிருஷ்ணபகவான் எழுந்தருளி திருவீதி உலாவரும் தேரில் வடம்பிடித்து நல்ல ருள் பெறுவோமாக!

ஆ.சிவநாதன்,
அதிபர், வல்வை சிவகுரு வித்தியாசாலை.


# MARSHA SYSTEMS (PVT) LTD.



உங்களுக்கு என்றொரு கணனியினை இன்றே உரிமையாக்கிக் கொள்ளுங்கள்
கணனி விற்பனை, மடிக் கணனி (Laptop) விற்பனை, கணனி திருத்துதல்.
எம்மிடம் கொள்வனவு செய்யும் கணனிகளுக்கு Life Time Service free
MMV Road, Nelliyady. Tel.: 021 4924118

கோடானு கோடி பக்தர்களைக் காத்து அருள்புரியும் மாயவனுக்கு அரோகரா!



# V. Manoharan

Chavakachcheri Road, Manthikai, Puloly.
T.P.: 021 2264192


Bicycle, Petrolmax, Building Materials,
PVC Pipes, Paints, Ceramics,
Electric goods Merchant

கருணையே வடிவமான கண்ணனை சிரம்தாழ்த்தி கை கூப்புகின்றோம்



# குமார் பேக் ஹவுஸ்
# Kumar Bake House

கேக் ஓடர்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
இல.28, சென்.செபஸ்ரியன் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
Tel.: 0213206392 No.:28, St.Sebestian Road, Passiyoor, Jaffna.



## கூட்டமைப்பின் டெல்லி விஜயம்:

# பேசவுள்ள விடயங்கள் குறித்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும்

### சுரேஷ். எம்.பி.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. வடக்கின் உயர் பாதுகாப்பு வலயங்களை இல்லாதொழிக்க இலங்கை அரசாங்கத்தை வலிறுத்துமாறு இந்திய மத்திய அரசாங்கத்திடம் கோரத் திட்டமிட்டுள்ளதாக கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்திய தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள், இந்திய அரசாங்கப் பிரதிநிதிகளை சந்திக்க உள்ளனர். எவ்வாறான விடயங்கள் குறித்து பேச்சுவாரத்தை நடத்துவது என்பது தொடர்பில் நிகழ்ச்சி நிரல் ஒன்று தயாரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடவலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த 28000 பொதுமக்கள் உயர்பாதுகாப்பு வலயங்களின் காரணமாக இன்னமும் சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாது காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த விடயம் குறித்து இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வரலாறு குறித்த கேள்வியில் கமரன் தடுமாற்றம்



பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கேமரன் அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பிரிட்டிஷ் குடியுரிமை பெறுவதற்காக நடத்தப்படும் பரீட்சை ஒன்றில் கேட்கப்படும் கேள்விகள் போல கேட்கப்பட்ட கேள்விகளில் சிலவற்றுக்கு தவறான பதிலகளைத் தந்தார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் டேவிட் லெட்டர்மான் நடத்தும் "லேட் ஷோ" என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கேமரன் அவரது கேள்விக்கணைகளில் சிக்கினார்.

பிரிட்டனின் மிகவும் பிரசித்தி பெற்ற, தனியார் பள்ளியான ஈட்டன் பள்ளியிலும், ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் படித்த கமரன், 1215ம் ஆண்டு கையொப்பமான, பிரிட்டிஷ் மன்னர்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் "மேக்னா கார்ட்டா" என்ற ஆவணத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு என்ன என்று சொல்லத்தெரியாமல் திணறினார் என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

# தனியார் பஸ்களுக்கான வீதி அனுமதிக் கட்டணம் அதிகரிப்பு

### தொழிற் சங்கங்கள் ஆட்சேபம்

தனியார் போக்குவரத்து பஸ்களுக்கான மாதாந்த வீதி அனுமதிக் கட்டணத்தை அதிகரிக்க மேல் மாகாண சபை தீர்மானித்துள்ளமைக்கு பஸ் சங்கங்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

600 ரூபாவாக இருந்த மாதாந்த வீதி அனுமதிப்பத்திர கட்டணம் நேற்று (27) தொடக்கம் 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எனினும் இது குறித்து தமது சங்கத்திற்கோ வேறு தரப்பினருக்கோ அறிவிக்கப்படவில்லை என அந்த சம்மேளனம் சுட்டிக் காட்டியுள்ளது.

மேல் மாகாண சபையின் இந்த நடவடிக்கையால் பஸ் தொழில் வீழ்ச்சியடையும் அபாயம் காணப்படுவதாக அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# கல்முனைக் கடலில் காணாமற்போன கடற்றொழிலாளி சடலமாக மீட்பு

கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை கல்முனையில் இருந்து ஆழ்கடல் மீன்பிடிப்புக்காக சென்று காணாமல் போன சாய்ந்தமருது மீனவர் நேற்று (27) வியாழக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாய்ந்தமருது -10 முந்திரியடி வீதியைச் சேர்ந்த எம்.வை.ஏ.லத்தீப் (வயது-52) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

கடந்த சனிக்கிழமை கல்முனை கடற் பரப்பிலிருந்து இயந்திரப் படகு ஒன்றில் ஆழ்கடல் மீன்பிடிப்புக்காக சென்ற மூன்று மீனவர்கள் தமது பணிகளை முடித்துக் கொண்டு மறுநாள் ஞாயிறு அதிகாலை திரும்பி வரும்போது படகை செலுத்தி வந்த மேற்படி மீனவர் ஏதோ ஒரு காரணத்தின் பேரில் படகில் இருந்து தவறி கடலில் விழுந்துள்ளார் எனக் கூறப்பட்டது.

இதன்போது நித்திரையில் இருந்த மற்ற இரு மீனவர்களும் சில நிமிடங்களில் விழித்துப் பார்க்கும் போது படகுச் சாரதியான சக மீனவர் இல்லாமல் படகு தத்தளிப்பதை கண்ணுற்று தமக்கு அண்மித்த பகுதியில் படகில் சென்று கொண்டிருந்த மீனவர்களின் உதவியை நாடியதன் பேரில் அவர்கள் இருவரும் காப்பாற்றப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் வழங்கிய தகவலின் பேரில் படகு உரிமையாளர் சங்கம் பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டை அடுத்து கடற்படையினரும் விமானப் படையினரும் சில நாட்கள் தொடர்ச்சியாக தேடுதல் நடத்தி வந்தனர். எனினும் அந்த முயற்சி வெற்றி அளிக்காத நிலையில் தேடும் நடவடிக்கைகள் [illegible] விடப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று அதிகாலை மீன்பிடிக்க கடலுக்கு சென்ற மீனவர்களினால், காணாமல் போன குறித்த மீனவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது உதவியுடன் உறவினர்கள் அதனை மீட்டுக் கொண்டு வந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சம்பவத்தின் போது படகில் இருந்த கல்முனைக்குடியை சேர்ந்த ஏனைய இரு மீனவர்களிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

காலியில், மஹமோதர மற்றும் கராபிட்டி போதனா வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் இன்று காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

காலி நகர மேயர், சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரை அச்சுறுத்தி அவரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த பணிப்பகி'கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டொக்டர் நவீன் டி சொய்சா தெரிவித்தார்.

# சவுதியிலும் யாழ்ப்பாண அகதி

சவுதியில் அகதிகளான 17 இலங்கையர்கள் நாடு திரும்பினர் இவர்கள் வெலிமட, பெலியத்த, பண்டாரவளை, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வந்தடைந்த 17 பேரில் 15 பேர் பெண்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சவுதி அரேபியாவில் நிர்க்கதியாகி அங்குள்ள முகாம்களில் வசித்து வந்த நிலையில் இலங்கை அதிகாரிகள் இவர்களை இனங்கண்டு நாட்டுக்கு அழைத்து வந்துள்ளனர்.

# விமானநிலையத்தில் மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கான இலவச சிகிச்சை

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கான இலவச இரத்தப் பரிசோதனை மற்றும் சிகிச்சையளிக்கும் திட்டம் ஆகியன ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விமான நிலைய சுகாதாரப் பிரிவினருக்கு இது தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாக மலேரியா ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான சரத் தெனியகே தெரிவித்தார்.

குறிப்பாக மலேரியா காய்ச்சல் பரவியுள்ள நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகின்ற மற்றும் அந்த நாடுகளுக்கு பயணமாகின்ற மக்களுக்கு இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சுமார் 20 பேர் மாத்திரமே பதிவானதுடன் வெளிநாடுகளில் இருந்து வருகின்றவர்களில் 55 பேர் பதிவானதாகவும் வைத்தியர் சரத் தெனியகே கூறினார்.

# சீனாவிலிருந்து 3000 பஸ்களை கொள்வனவு தீவிர முயற்சி

இலங்கை போக்குவரத்து சபையிடம் ஐயாயிரம் பஸ்கள் உள்ள போதும் இவற்றில் அரைவாசிக்கு மேற்பட்டவை மிகவும் பழைமையானவை என போக்குவரத்து அமைச்சா குமார வெல்கம தெரிவிக்கிறார்.

இதேநேரம் தனியார் போக்குவரத்து துறை போராட்டங்களை நடத்தி நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது.

தனியார் துறையை எதிர கொள்ள சீனாவிடமிருந்து மூவாயிரம் பஸ்களை இறக்குமதி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது குறித்து சீன அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை இடம் பெற்று வரும் நிலையில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் பஸ் கொள்வனவு குறித்து சீனாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் போராட்டம் நடத்தப்படும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக விவசாய மற்றும் பொறி யியல் பீட வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிரமதானப் பணிகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் சுமார் 2000ற்கும் மேற்பட்ட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# யாழ் பொலிசுக்கு புதிய மோப்ப நாய்கள்

யாழ். குடாநாட்டின் குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக விசேடமாக பயிற்றப்பட்ட மோப்ப நாய்கள் மூன்று கொழும்பிலிருந்து நேற்று வந்திருக்கிறது. இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் இந்த மோப்ப நாய்கள் யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழில் குற்றச் செயல்களைக் கண்டறிவதற்காக இந்த நாய்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இவை அவுஸ்திரேலியாவில் விசேட பயிற்சியளிக்கப்பட்டவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# நைஜீரியப் பெண் சவுதியிலிருந்து வெளியேற்றம் சவுதி- நைஜீரிய விமான சேவைகள் நிறுத்தம்


சவுதி அரேபியாவுக்கு ஆண் துணையின்றி ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள வந்ததாகக் கூறப்படும் 170க்கும் மேற்பட்ட நைஜீரியப் பெண்களை சவுதி அரேபியா நாட்டை விட்டு வெளியேற்றியதை அடுத்து, சவுதி அரேபியாவுக்கு புனிதப் பயணம் செய்யும் பயணிகளை ஏற்றிச் செல்லும் அனைத்து விமானச் சேவைகளையும் நைஜீரியா இடை நிறுத்தியிருக்கிறது.

நைஜீரிய ஹஜ் பயணிகள் இவ்வாறு நடத்தப்படுவதைப் பற்றி புகார் செய்ய சவுதி அரேபியாவுக்கு நைஜீரிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் தலைமையில் ஒரு குழு செல்லவிருக்கிறது.

ஹஜ் புனிதப் பயணம் முடிந்த பிறகு பல ஆபரிக்கர்கள் சவுதி அரேபியாவிலேயே தங்கி, அங்கு பிச்சை எடுப்பதன் மூலமும், விபசாரத்தில் ஈடுபடுவதன் மூலமும் பிழைப்பு நடத்துவதாக வரும் செய்திகள் குறித்து சவுதி அரேபியா நீண்டகாலமாகவே கவலை தெரிவித்து வருகிறது.

### இன்று நடேசர் அபிஷேக தினம்

## தில்லையிலே கூத்தாடும் அம்பலவன்



சிவமூர்த்தங்களுள் ஒன்று நடராஜர். சிவன் ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி தில்லையிலே கனக சபையிலே சித்தாகாச வெளியிலே ஆனந்தக் கூத்தாடுகின்றான். சிதம்பரம் சைவர்களால் கோயில் எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இச்சிதம்பரத்திற்கென்றே கோயிற்றிருப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம் என்பவை பாடப்பட்டுள்ளது. கீர்த்தித்திரு அகவல், போற்றித் திருஅகவல், திருவண்டப் பகுதி, திருப்பொற்சுண்ணம், திருக் கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்படை ஆட்சி, திருச் சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணாக்கம், திருப்பொன்னூஞ்சல், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், கண்டப் பத்து, அச்சப்பத்து, குயிற்பத்து, திருத்தசாங்கம், கண்டப் பத்து, அச்சப் பத்து, குயிற்பத்து,

எண்ணப்பதிகம், யாத்திரைப் பத்து, திருப்படையெழுச்சி, ஆனந்தமாலை, அச்சோப்பதிகம் என்பவை தில்லையில் அருளப்பட்டவை. மணிவாசகர் பல நாட்கள் தில்லையில் வாழ்ந்தமையாலும் நிறைவிலே திருவாசகத்தின் பொருள் கூறுகின்றேன், காட்டுகின்றேன் எனக்கூறி தில்லைக் கோயிலுக்குள் சென்று மறைந்தமையும், தில்லைச் சிற்றம்பலவன் மீதிருந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

***சைவப்புலவர் கந்த சத்தியதாசன்***
***(நன்றி சைவப்புலவன்)***


## உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய திருவிழா



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 20ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. பங்குத்தந்தை அருட்பணி யூட் நிக்ஷன் அடிகளார் இது தொடர்பான தகவல்களை வழங்கியுள்ளார்.

இன்று (வெள்ளிக்கிழமை) நற்கருணைப் பெருவிழா இடம்பெறுகிறது. நாளை (சனிக்கிழமை) காலை 6.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். திருநாள் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, திருச்சுரூபப் பவனியும் இடம்பெறுவதுடன் திருச்சுரூப ஆசீர்வாதமும் வழங்கப்படும்.

ஆலயத்தில் நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 6.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவதுடன், நவநாட்களுக்கான மறை உரையை அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை எஸ். செலஸ்ரீன் அடிகளார் வழங்கி வருகிறார்.



சர்வதேச இந்து மத குரு பீடம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்திய இந்து சமய ஆன்மீகப் பெருவிழாவில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் கந்த சத்தியதாசன் பீடாதிபதி சிவஸ்ரீ ஜயப்பதாஸ சிவாச்சாரியாரால் "கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஞாபகார்த்த விருதும்" "வித்யா சிரோமணி" பட்டமும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுவதையும், அருகே தென்னிந்திய திரைப்பட நடிகர் சரத்பாபு நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சமய தீபம்

## வில்வமிலையின் விசேடம்


வில்வம் பத்திரத்தில் மகாலஷ்மி வாசம் செய்கிறாள். ஒரு வில்வதளம் சிவனுக்கு அர்ப்பணிப்பதால் மகாபாவங்கள் விலகிச் சகல ஷேமங்களும் உண்டாகும். மாதப்பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமி ஆகிய நாள்களில் வில்வம் பறிக்கக் கூடாது. அப்படியாயின் இந்நாளில் பூஜைக்குத் தேவைப்படும் வில்வத்தை முதனாள் மாலை வேளையிலேயே பறித்துக் கொள்ள வேண்டும்.

அர்ச்சனைக்குரிய மலர்களுக்கு இணையாக பத்திரங்களும் இலைகளும் கருதப்படுவதால், பூசிப்பவரைப் புனிதமாக்கும் தன்மை வில்வம் முதலான துளசி, மருக்கொழுந்து, நொச்சி, கரந்தை, எலுமிச்சக் கிளுவை, வள்ளி, மாவிலங்கை, விளாமிச்சை, இலந்தை, கதிர்பச்சை, மாசிப்பச்சை போன்ற பத்திரங்களுக்குமுண்டு.

சிவவழிபாட்டில் மிகப் புனிதமானதும், விசேடமானதுமான வில்வத்தின் சிறப்பைப் பின்வரும் பாடல் சுட்டிகிறது.

*"நோயற வேண்டினும்*
*நோன்மை வேண்டினும்*
*மாயிரும் புவி அடி*
*வணங்க வேண்டினும்*
*தூயவின் வேண்டினும்*
*துறத்து மும்மலம்*
*ஒயரன் முத்தியை*
*உதவும் வில்வமே"*

(பேரூர்ப்புராணப்பாடல்)
- எம்.எஸ். ஸ்ரீதயாளன்
(அர்த்தமுள்ள சம்பிரதாயம் நூலிலிருந்து)



**இன்று வல்லிபுர ஆழ்வார் இரதோற்சவம்**

# இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**
28.09.2012 வெள்ளி: நடேசர் அபிஷேகம்
29.09.2012 சனி: பூரணை விரதம்
30.09.2012 ஞாயிறு: மஹாள பட்சம் ஆரம்பம்
03.10.2012 புதன்: மஹாபரணி
04.10.2012 வியாழன்: கார்த்திகை விரதம்

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**
01.10.2012 திங்கள்: குழந்தை இயேசுவின் புனித தெரேசா பெருவிழா

## கிறிஸ்தவ நற்சிந்தனை

எம் நடத்தை எல்லாம் எமது பார்வையில் நல்லவையாக தோன்றலாம். ஆனால் ஆண்டவர் உள்ளெண்ணத்தை சீர் தூக்கிப் பார்க் கிறார்.

ஆண்டவரின் திருப்பெயர் உறுதியான கோட்டை, அவருக்கு அஞ்சி நடப்பவர் அதனுட் சென்று அடைக்கலம் பெறுவர்.

ஆண்டவருக்கு அஞ்சி நடந்தால் ஆயுள் நீடிக்கும். அவ்வாறு நடப்பவருக்கு மன நிறைவு கிட்டும், தீங்கும் அவரை அணுகாது


## இஸ்லாமிய நற்சிந்தனை

நல்ல உபதேசங்களை மறந்துவிட்டு வாழும்போது வெற்றிகரமான பாதையை நோக்கி நடைபோட முடியாது. "எவர் என்னுடைய நல்லுபதேசத்தை புறக்கணிக்கிறாரோ நிச்சயமாக அவருக்கு நெருக்கடியான வாழ்க்கையே உள்ளது" என்கிறது திருமறை (அல்குர்ஆன்)

இந்த வசனத்திற்கு இமாம் இப்னு கதீர் விளக்கம் கூறுகையில், "யார் அல்லாஹ்வுடைய ஏவல்களைப் புறக்கணித்தும் அவற்றை மறந்தும் விடுகின்றாரோ அவருக்கு இவ்வுலகில் நெருக்கடியான வாழ்க்கையே உள்ளது. அவருடைய உள்ளம் விரிவாக்கப்படமாட்டாது. அல்லாஹ் அவருக்கு வெளிப்படையாகப் பல அருட்கொடைகளை வழங்கி, அவர் விரும்பியதையே உண்டு அணிந்து அவர் விரும்பியவாறு வாழ்ந்த போதிலும் அவருடைய உள்ளத்தில் கலக்கம், குழப்பம், சந்தேகம் போன்றவையே காணப்படும் என்கிறார்.

"தெரிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் நினைவைக் கொண்டே உள்ளங்கள் அமைதியடைகின்றன" என்கிறது அல்குர்ஆன்.

## நற்சிந்தனை



### உன் கடமையைச் செய்

குழந்தைக்குத் தாய் பேசக் கற்றுக் கொடுக்கிறாள். பேச வேண்டியது குழந்தையே. ஆசான் மாணவனுக்குக் கல்வி போதிக்கிறார். கற்று அதன்படி நடக்க வேண்டியது மாணவனின் கடமையே. இறைவனை மனக்கண்ணின் முன் நிறுத்தி அவனோடு ஒன்றி விடுவது மனிதனின் கடமை.

உன் கடமைகளைச் சரிவர ஆற்ற வேண்டி பிரார்த்தனை செய். கட்டாயம் உன் பிரார்த்தனைக்குக் கடவுள் செவி சாய்ப்பார். இறைவனின் மேல் பார்த்தைப் போட்டுவிட்டு கடமையை மறந்துவிடாதே. மாட்டுக்காரன் மேய்ச்சல் காட்டுக்கு மாட்டை ஓட்டித்தான் போவான். மேய வேண்டியது மாடுதானே. உன் கடமையைச் செய், பலனுக்காக கையேந்தாதே. அதுவே பெரிய வேள்வி ஆகும்.

புடலங்காயில் ஒரு சுமையைக் கட்டினால் வளையாது. நீண்டு வளரும். மனிதனுக்கும் கடமை என்னும் சுமையைக் கட்டினால் வளையாது நேராக வாழ்வான். நீ எங்கு சென்றாலும் உன் கடமையைச் செய். உன்னுள் இருந்து நான் வழிகாட்டிக் கொண்டிருககிறேன் என்பதை உணர்ந்து கொள்.

ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் இறைவன் உன்னுடன் இருக்கிறான் என்பதை உணர்ந்துகொள். நீ அவனுக்கு மிகவும் நெருக்கமானவன். கண் இமைகள் விழியைக் காப்பது போல இறைவன் உன்னைக் காப்பாற்றுவான். அவன் உன்னைவிட்டு விலக மாட்டான். நீயும் அவனைவிட்டு விலக முடியாது. இந்த நிமிடத்திலிருந்து எதையும் எதிர்பார்த்துச் செயல்படாதே. மாறாத அன்புடன் உன் கடமையைச் செய்.

***- பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா.***

# வரலாற்றுப் பெருமை வாய்ந்த வல்லிபுரம்

வல்லிபுரம் என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கடற்கரையோரமாக வடமராட்சி பகுதியில் அமைந்துள்ள ஒரு ஊராகும். இப்பொழுது இது மிகவும் குடித்தொகை அடர்த்தி குறைந்த இடமாக உள்ளது. பழங்காலத்தில் இவ்விடத்தில் முக்கியமான குடியிருப்புக்கள் இருந்ததற்கான தொல்பொருட் சான்றுகள் உள்ளன. இதனையும், வேறு வரலாற்று, இலக்கிய ஆதாரங்களையும் முன்வைத்து, சிங்கைநகர் என்று குறிப்பிடப்படுகின்ற யாழ்ப்பாண அரசின் தலைநகரமே வல்லிபுரம் என்று சில ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

வல்லிபுரம் என்ற பெயர் இக் கிராமத்திற்கு எவ்வாறு ஏற்பட்டது என்பது பற்றி பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் நாகர்களுடைய ஆட்சி கி.பி. 303 இலும் லம்பகர்ணர் ஆட்சி 556 இலும் முடிவுக்கு வந்தது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும். இப்பகுதிகளில் குடியேறிய படை வீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கியபோது வட மறவர்கள் ஆட்சி செய்த இடம் வடமராட்சி எனப்பட்டது. நூலாசிரியரான ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களின் கருத்துப்படி தொண்டை நாட்டின் வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும் அவர்கள் குடியேறிய பிரதேசத்திற்கு வடமராட்சி என்று பெயரிட்டதாகவும் தெரியவருகிறது. அக்குழுவின் தலைவனாக வல்லியத்தேவன் என்பவன் இருந்ததாகவும் அவனின் பெயரைக் குறிக்கும் முகமாக இக்கிராமத்திற்கு வல்லிபுரம் என்று பெயரிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது

**வல்லி என்ற சொல்லுக்கு ஆயர்பாடி என்ற ஒரு கருத்தும் புரம் என்றால் கோவில் என்றும் பொருள் கொள்ள முடியும். எனவே வல்லிபுரம் என்பது ஆயர் பாடிக் கோவிலாகவும் கண்ணன் வளர்ந்த இடமாகவும் கொள்ளப்படுகிறது.**

வல்லி என்ற சொல்லுக்கு ஆயர்பாடி என்ற ஒரு கருத்தும் புரம் என்றால் கோவில் என்றும் பொருள் கொள்ள முடியும். எனவே வல்லிபுரம் என்பது ஆயர் பாடிக் கோவிலாகவும் கண்ணன் வளர்ந்த இடமாகவும் கொள்ளப் படுகிறது.

இவ்வாறு வல்லிபுரம் என்ற பெயர் வருவதற்குக் காரணமான பல விடயங்கள் கூறப்பட்டாலும் இப்பிரதேசத்தில் குடியேறிய மக்கள் தெலுங்கர்களாகவும் வைணவ மதத்தைப் பின்பற்றுபவர்களாகவும் இருந்ததாக கருதவும் இட முண்டு.

இராசதானியாக விளங்கிய சிங்கை நகர் எது என்பது பற்றி வரலாற்று ஆசிரியர்களுக்கிடையில் பல முரண்பாடுகள் உண்டு. சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்துப்படி வல்லிபுரப் பிரதேசமே இராசதானியாக விளங்கிய சிங்கை நகர் என்பதாக அறியப்படுகிறது. ஆனால் அது யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூர் பிரதேசம் என்பது வேறு சிலருடைய கருத்தாகும். எது எப்படி என்றாலும் சிங்கை நகர் அலையெறியும் கடற்கரையோரத்தில்தான் அமைந்திருந்தது எனக் கூறப்படுகிறது. ***(நன்றி: இணையம்)***

வீட்டின் ஒவ்வொரு கதவையும் வேட்டை நாய்கள் காவல் புரிந்து வந்தன. அவசியம் நேர்ந்தபோது நெப்போலியன் வெளியே கிளம் பினால், ஏதோ ஊர்வலம் கிளம்பு வதுபோல இருக்கும். முன்னும் பின்னும் வேட்டை நாய்கள் புடை சூழ்ந்து காவல் காத்துவர அது வெளியே வரும், யாராவது தப்பித் தவறி நெருங்கி வந்துவிட்டால் ஒரே சமயத்தில் சில நாய்களா வது உறுமத் தொடங்கிவிடும். ஞாயிறு அன்று காலையில் கூட நெப்போலியனைக் காண முடி யாது. வேறு யாராவது ஒரு பன்றி மூலம் (அநேகமாக அது ஸ்க் வீலர் பன்றியாகத்தான் இருக்கும்) அடுத்த வாரத்துக்கான தனது உத்தரவுகளை அது மிருகங்களுக் குத் தெரிவித்துவிடும். ஒரு ஞாயி றன்று காலையில், பெட்டைக் கோழிகள் இடும் முட்டைகளை- யெல்லாம் தந்துவிட வேண்டு மென்று ஸ்க்வீலர் பன்றி அறிவி த்தது. வாரத்தில் நானூறு முட்டை கள் தருவதாகக் கிராமத்துடன், வக்கீல் விம்பர் மூலம், நெப்போலியன் ஒரு ஒப்பந்தம்





செய்துகொண்டிருந்தது.


இதனால் கிடைக்கும் பணத் தைக் கொண்டு தேவையான தானியமும் உணவும் வாங்க இய லும். அடுத்த அறுவடை வரை யிலும் விலங்குகளைக் காப்பாற்றி விடலாம். நிலைமை வசதியாக மாறும்வரையில் பெட்டைக் கோழிகள் இடும் முட்டைகளை- யெல்லாம் தந்துவிட வேண்டுமென்று அறிவித்தது. ஸ்க் வீலர். இதைக் கேட்ட பெட்டைக் கோழிகள் பயங்கரமாகக் கூச்சலிட்டன.

இந்த மாதிரி யான ஒரு தியாகம் செய்ய வேண்டியிருக்கு மென்று முன்னரே அவற்றிற்கு அறிவிக் கப்பட்டிருந்தது. இருந்தும் இப்படி ஒருநாள் ஏற்படலாம் என்று அவை நம்பாமலே இருந்துவிட்டன. வசந்த கால முட்டையிடலுக்குத் தயார் செய்து கொண்டிருந்த அவை, முட்டைகளைக் கொடுக்க மறுத்து விட்டன. முட்டைகளை எடுத்து விற்பது கொலைகாரச் செயல் என்றன. ஜோன்ஸை விரட்டிய தற்குப் பிறகு இப்பொழுது தான் முதல் தடவையாக புரட்சி, கலகம் என்று சொல்லக்கூடிய அளவில் இந்தமாதிரியான சம்பவம் விலங் குப் பண்ணையில் நிகழ்ந்தது. வாலிப, கறுப்பு மினோர்க்கா கோழிகள் மூன்றின் தலைமையில், பெட்டைக் கோழிகள் நெப்போலி யனின் உத்தரவை எதிர்த்து நிற்கத் தயாராகின. கீழ்படிய மறுத்தன. அவை கூரை உச்சி யிலே உத்தரத்தின்மீது உட்கார்ந்து கொண்டு முட்டைகளை இட்டன. முட்டைகள் கீழே விழுந்து உடைந் தன. நெப்போலியன் தயை தாட்சண் யம் காட்டாமல் உடனேயே அவற் றைத் தண்டிக்கத் தொடங்கியது. நெப்போலியன் உத்தரவுப்படி பெட்டைக் கோழிகளுக்கு உணவு தருவது நிறுத்தப்பட்டது. பெட்டைக் கோழிகளுக்கு ஒருமணி தானியம் கொடுக்கிற மிருகத்துக்கு மரண தண்டனை விதிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. (திங்கள்)

## வரைவோம் வாருங்கள்!



## விடுகதைகள்




1. தட்ட.. தட்ட தகடு. காய.. காய விறகு. அது என்ன?

2.தடையில் எட்டு, இடையில் ஐந்து. கடையில் மை. எல்லாம் சேர்ந்தால் மேன்மை அது என்ன?


3.சிங்காரப் பூப் பூத்து வெங் காயக் காய் காய்த்துத் தொங்காத காய் என்ன காய்?

4.சிறு சிறு கதவுகள் செய் யாத கதவுகள் திறக்க அடை க்க சுத்தம் செய்யாத கதவு கள் அது என்ன?

விடைகள்:
1. மாட்டெரு 2. அருமை
3. எள்ளுக்காய்
4. கண் இமை

## எரி மீன்

விண் வீழ் கொள்ளி என்றும் இதைத் கூறுவது உண்டு. அண்டவெளியிலிருந்து ஒரு திடப்பொருள் பூமியின் வளி மண்டலத்துக்குள் நுழையும்போது பளிச்சிடும் ஒளியே இது. அப்பொருள் பூமிப் பரப்பை அடையும் வரை எரி மீன் என்றும் தரையில் வீழ்ந்ததும் விண்வீழ் கல் என்றும் பெயர். விண்வீழ் கற்கள் சூரியனைச் சுற்றி வருபவை. அவை உலோகம் அல்லது பாறைப் பொருளாக இருக்கும். பூமியை அணுகும்போது அதன் ஈர்ப்பு சக்திக்குள் அகப்பட்டுக் கொள்கிறது. வளி மண்டலத் தில் நுழையும்போது உராய்தலினால் ஏற்படும் வெப்பம் 2200 பாகை பரனைட் கூட இருக்கும். இந்த வெப்பம் விண் வீழ் கற்களை ஒளிர வைக்கிறது. பெரும்பாலான கற்கள் எரிந்து விடுகின்றன. மிகப் பெரி யவை மட்டுமே பூமிப் பரப்பை வந்தடைகின்றன. ஒவ்வொரு நாளும் கண்ணுக்குப் புலனாகும் இரண்டரைக் கோடி கற்கள் பூமியை வந்தடைகின்றன என விண்வெளி ஆய்வாளர்களால் கூறப்படுகிறது.



## ஜுராசிக் கால கட்டம்

18 கோடி வருடங்களுக்கு முன்பு தொடங்கி 5 கோடி ஆண்டு கள் நீடித்த காலகட்டம் இது. டைனோசர்கள் இக்கால கட்டத்தில்தான் தங்கள் உயர்ந்தபட்ச வளர்ச்சியை அடைந்தன. முதல் பறவையான ஆர்க்கேயப்பெரிக்ஸ் அப்போது வாழ்ந்தது. முதலைகள், மீன்கள் மற்றும் சில உயிரினங் களும் நிலப்பரப்பில் கூம்பு வடிவ மரங்களும் மட்டுமே அப்போது இருந்தன. இயற்கை வாயு, எண்ணெய், தங்கம், யுரேனியம் போன்றவை இக்கால கட்டத்தில் உருவாகின. நிலப்பரப்பு முழுவ தும் ஒரே கண்டமாக இருந்த பங்கேயாவிலிருந்து அமெரிக்கா பிரிந்து சென்றது இக்காலத் தில்தான் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

## சிலையின் விலை



மன்னர் மாதவசேனர் கலாரசிகர். அவர் பல அழகிய ஓவியங்களையும் சிலைகளையும் சேகரித்து ஓர் அருங்காட்சியகத்தை அமைத்தார். அதை நன்கு கவனித்து நிர்வகிக்க கலையை மதித்து இரசிக்கக் கூடிய ஒருவனைத் தேர்ந்த எடுக்க விரும்பினார்.

அதனால் அருங்காட்சியகத்தின் நிர்வாகி என்ற பதவிக்கு தேர்வு ஒரு குறிப்பிட்ட நாளில் நடக்கும் என்று நாடெங்கிலும் பறைசாற்றுவிக்கப் பட்டது. அத்தேர்விற்குப் பல கலைஞர்கள் வந்தார்கள். அவர்களை வடிகட்டி மூன்று பேர்களை ஆஸ்தான பண்டிதர் தேர்ந்து எடுத்தார்.

மன்னரும் அந்த மூவரையும் கூட்டிக் கொண்டு அருங்காட்சியகத்திற்குள் சென்றார். அங்கு ஓர் அழகிய சிலையை அவர்களுக்குக் காட்டி அவர் இந்த அழகிய சிலைக்கு எவ்வளவு பணம் கொடுத்து வாங்கி எடுத்துக் கொண்டு போவீர்கள்? என்று கேட்டார். சாகரன், இந்த அழகிய சிலைக்கு என் சொத்து முழுவதையும் விலையாகக் கொடுத்துவிட்டு இதை எடுத்துக் கொண்டு செல்வேன், என்றான். சேகரனும், என்னிடம் உள்ளவற்றை எல்லாம் விற்று இதை வாங்கிக் கொண்டு போய்விடுவேன், என்றான்.

சுதாகரனோ, அரசே! இதன் விலையை மதிப்பிடவே முடியாது. இந்த அழகிய கலை அம்சம் கொண்ட சிலையை எல்லோரும் பார்த்து ரசிக்க வேண்டும். இது இங்கேயே இருக்க வேண்டிய அற்புதப் படைப்பு. இதை விலை கொடுத்து வாங்கவும் மாட்டேன். விற்கக் கூடாது என்றும் கூறுவேன், என்றான். மன்னர் சுதாகரனையே அருங்காட்சியக நிர்வாகியாக நியமித்தார்.

# சிறுவர் அமுதம்

சுடோக்கு எண் 61 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 9 | 4 | 3 | 5 | 1 | 6 | 8 |
| 4 | 8 | 1 | 2 | 7 | 6 | 5 | 9 | 3 |
| 5 | 6 | 3 | 9 | 1 | 8 | 2 | 7 | 4 |
| 1 | 5 | 2 | 8 | 9 | 7 | 4 | 3 | 6 |
| 8 | 4 | 7 | 3 | 6 | 1 | 9 | 5 | 2 |
| 3 | 9 | 6 | 5 | 2 | 4 | 7 | 8 | 1 |
| 2 | 3 | 8 | 7 | 4 | 9 | 6 | 1 | 5 |
| 6 | 7 | 4 | 1 | 5 | 3 | 8 | 2 | 9 |
| 9 | 1 | 5 | 6 | 8 | 2 | 3 | 4 | 7 |

சுடோக்கு எண் 62

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | 3 | | |
| 8 | | | 3 | | | | 4 | 1 |
| | | 5 | | | | | 7 | |
| | | | | 2 | 9 | | | |
| 5 | | 3 | 8 | | 4 | 6 | | 9 |
| | | | 6 | 5 | | | | |
| | 9 | | | | | 7 | | |
| 6 | 1 | | | | 2 | | | 3 |
| | | 2 | 4 | | | | | |

குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# உயர் பாதுகாப்பு வலயம் பற்றி இந்தியத் தலைவர்களுடன் கூட்டமைப்பு பேசும்

அடுத்த மாதம் புதுடில்லி செல்லவிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியத் தலைவர்களுடன் நடத்தும் பேச்சுவார்த்தையின்போது யாழ்ப்பாணத்திலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றிய பிரச்சினையை எழுப்புவார்கள் என்று தெரிய வருகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும், வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவையும் சந்தித்தும் பேசுவார்கள் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. யான சுரேஷ் பிரமச்சந்திரன் தெரிவித்தார்.

அடுத்த மாதம் பத்தாம் திகதி கூட்டமைப்பின் எம்.பீக்கள் குழு புதுடில்லி செல்லவுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி மீள் குடியேற்றம், இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வலிகாமம் வடக்கில் இருபத்தெட்டாயிரம் மக்கள் தமது சொந்த வீடுகளில் இன்னமும் மீள் குடியமர்த்தப் படவில்லை. எனவே உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் நாம் நிச்சயமாகப் பேசுவோம்" என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. சொன்னார்.

உயர் பாதுகாப்பு வலயம் இல்லையென்று அரசாங்கத் தலைவர்கள் கூறினாலும், வடக்கிலும் கிழக்கிலும் உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்கின்றன. இதனால் இருபது வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த வீடுகளைவிட்டு வெளியேறிய மக்கள் இன்னமும் மீள்குடியேற்றப் படாமல் உள்ளனர்.

# ஐந்தாம் வகுப்பு சிறுமியின் சோகக்கதை

கடந்த ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்ற உதேஷி நெட்மி டி சில்வா என்ற சிறுமி அன்றைய தினமே தனது தந்தையை பறிகொடுத்தார்.

எல்பிட்டிய இந்திபலைய கொட மகா வித்தியாலயத்தில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர் இந்த மாணவியாவார். பரீட்சை எழுதிவிட்டு வீட்டிற்கு வந்த சிறுமியைப் பார்த்து பரீட்சை நன்றாக எழுதினாயா என்று தந்தை கேட்ட போது, "மிக நன்றாகவே எழுதினேன்" என்று சிறுமி பதிலளித்தபோது தந்தை மாரடைப்பு ஏற்பட்டுக் காலமானார்.

# சக்விதி ரணசிங்க மீது இருதாரக் குற்றச்சாட்டு

கோடிக் கணக்கான ரூபாவை மோசடி செய்த சக்விதி ரணசிங்க மீது இருதார குற்றச்சாட்டொன்றினை நேற்று முன்தினம் சட்டமா அதிபர் சுமத்தியுள்ளார். வெல்லம்பிட்டியைச் சேர்ந்த சுபாசினி டி சில்வா என்பவரை முதலில் மணம் புரிந்த சக்விதி ரணசிங்க, பின்னர் குமாரி அருந்ததி என்ற பெண்ணையும் மணம் புரிந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் அவர் மீதான குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டபோது தன் மீதான குற்றப்பத்திரம் வாசிக்கப்பட்டபோது தான் நிரபராதி என்று சக்விதி ரணசிங்க தெரிவித்தார்.

# கடமை நிறைவேற்று அதிபர்களாக இருப்பவர்களுக்கு நிரந்தர நியமனம் உடனடியாக வழங்கப்படவேண்டும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

நாட்டில் உள்ள அனேகமான பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாக (Perfoming Principals) கடமையாற்றுகின்ற அதிபர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கும், கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அவசர வேண்டுகோளை முன்வைத்துள்ளது.

நாட்டில் உள்ள அநேகமான பாடசாலைகளில் கடமைநிறைவேற்று அதிபர்களாக (Prerfoming Principals) பலர் நீண்ட காலமாக கடமையாற்றுகின்றனர். இதற்கான அங்கீகாரத்தினை அந்தப் பிரதேச கல்வித் திணைக்களங்கள் அவ்வப்போது வழங்கி வந்துள்ளன. பாடசாலைகளை அதிபர்கள் இல்லாமல் நடத்த முடியாது என்கின்ற சூழ்நிலையில் கடமை நிறைவேற்று அதிபர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவர்களது நிரந்தர நியமனம் தொடர்பாக பல தடவைகள் கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தியும் அதனை கல்வி அமைச்சு கருத்தில் கொள்வதாக தெரிய வில்லை.

தற்போது நியமனம் கிடைக்கபெறுகின்ற அதிபர்களோடு இந்தக் கடமை நிறைவேற்று அதிபர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று அவசர வேண்டுகோளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுக்கின்றது.

குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் யுத்த சூழ்நிலைகளிற்கு முகம் கொடுத்து பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்து கஷ்டமான சூழ்நிலைகளிலும் பாட சாலைகளில் அர்ப்பணிப்போடு கடமை யாற்றிய இவர்களுக்கு நிரந்தர நியம னம் வழங்காமல் விடுவதற்கு எவ்வகையான நியாயமும் இல்லை.

அதிபர் நியமனம் கிடைக்கப்பெற்றவர்கள் பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் போது கடமை நிறைவேற்று அதிபர்கள் ஆசிரியராக மாறுவதா? இந்தச் சிக்கலான நிலைமையை சீராக்குவதற்கு இவர்களுக்கும் சமகாலத்தில் நிரந்தர நியமனத்தை வழங்குமாறு சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது.

இதைவிட சேவைத்தரம் 2-1 இல் நீண்ட காலம் கடமையாற்றுகின்ற அதிபர்கள் பலருக்கு அதிபர் சேவைத் தரம் - I வழங்குதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெற்றும் அரசியல் காரணங்களால் நிறுத்தி வைக்கப்ட்டிருப்பதாக அறிகின்றோம்.

ஜனநாயக நாட்டில் கல்வியில் இதுபோன்ற பழிவாங்கல்கல இடம்பெறுவதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

2006 ஆம் ஆண்டு இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிபர் சேவைத் தரம் - I இனை உடனடியாக வழங்குமாறு சங்கம் கேட்டுக்கொள்கின்றது.

இவ்வாறு மேற்படி சங்கத்தின் தலைவர் சரா. புவனேஸ்வரன் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# கஹவத்தையில் 6 பெண்கள் படுகொலை, உள்ளூர் அரசியல்வாதியே சூத்திரதாரி

இரத்தினபுரி கஹவத்தையில் ஆறு பெண்கள் கொல்லப்பட்டமைக்கு உள்ளூர் அரச சார்பு அரசி யல்வாதி ஒருவரினால் தலைமை தாங்கப்படும் குழுவே காரணமொன்று பொலிசார் தெரிவித்தனர்.

கஹவத்தை கொட்டஹேதன என்ற இடத்தில் தாயும், மகளும் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அரசியல்வாதி தற்போது விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவர் வசிக்கும் பகுதியில் உள்ள போதை வஸ்து கடத்தல்காரர் பற்றி பொலிசாருக்கு தகவல் வழங் கினார் என்று கூறியே தாயும், மகளும் கொல்லப் பட்டனர்.

பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி நடைபெற்ற இந்த இரட்டைக் கொலைகள் பற்றிய பொலிஸ் விசா ரணையைத் திசை திருப்புவதற்காகப் பிரதான சந் தேக நபர் கொந்தராத்து அடிப்படையில் கொலை செய்யும் சிலரின் உத்வியைப் பெற்றார் என்றும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

கடந்த மே மாதம் முப்பத்தோராம் திகதி தயாவரி, திலகவதி என்ற இரண்டு சகோதரிகளை கொலை செய்வதற்கு இந்த உள்ளூராட்சி அரசியல்வாதி கொந்தராத்து கொலையாளிகளின் உதவியைப் பெற்றார் என்று பொலிசார் தெரிவித்தனர்.

இந்தக் கொந்தராத்துக் கொலைக் குழுவில் ஐந்து பேர் உள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

# யாழ்.மாநகரின் அபிவிருத்தி பற்றி சபையில் ஆராய்வு

யாழ்.மாநகர சபையின் மாதாந்த பொதுக் கூட்டம் நேற்று மதியம் 2.30 மணியளவில் யாழ்.மாநகர சபை மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன் போது யாழ். மாநகர சபையினால் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வரும் அபிவிருத்திப்பணிகள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

இச் செயற்பாட்டினால் மாநகரசபைக்கு ஏற்பட்ட செலவீனங்கள் வருமானங்கள் தொடர்பில் வினாக்களும் எழுப்பப்பட்டன.

இதனையடுத்து யாழ்.மாநகர சபையின் கண்காணிப்பின் கீழ் இயங்கிவரும் மகப்பேற்று நிலையங்களில் தற்போதைய மோசமான நிலைமை தொடர்பாக ஆளுந்தரப்பு உறுப்பினர் ஒருவரினால் சுட்டிக்காட்டப்பட்டு.

சபையில் குறித்த மகப்பேற்று நிலையங்கள் மறுசீரமைப்பு உடனடியாக செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டு இருத்தரப்பினராலும் ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டது.

# யாழ்.நகரில் இப்பொழுது TOEIC தகமைகள்

யாழ் நகரில் தற்பொழுது உலகப்பிரசித்தி பெற்ற TOEIC பரீட்சைகள் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. TOEIC பரீட்சை அலுவலக ஊழியர்கள், வெளிநாடுகளில் உயர் கல்விவாய்ப்பு தேடுவோர், கணவன் மனைவியாக புகலிடக் கோரிக்கை அங்கீகாரம் பெறவிரும்புவோர், ஆங்கிலத்தை ஆரம்பத்திலிருந்து கல்வி பயில விரும்புவோர் ஆகியோரின் ஆங்கில மொழி புலமை அளவினை மதிப்பீடு செய்ய உதவுகின்றது.

TOEIC பரீட்சையானது வருடாந்தம் 6 மில்லியன் பரீட்சை எடுக்கும் பரீட்சார்த்திகளின் தெரிவாகக் காணப்படுகின்றது. மேலும் ஆயிரக்கணக்கான நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஐக்கிய இராச்சிய எல்லை முகவர் நிலையத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது (UKBA)

விசேடமாக பின்வருவோர் இப் பரீட்சையை மேற்கொள்கின்றனர்.

1. சகல தொழில் துறைகளிலும், சர்வதேச தொடர்பாடலிலும், விளையாட்டு துறைகளிலும் இருப்போருக்கு அவசியமான ஒன்றாக ஆங்கிலம் காணப்படுகின்றது. இதற்கு ஒரே ஊடகமாக வுழுநுஐஊ காணப்படுகின்றது.

2. மற்றும் தனிப்பட்ட முறையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோர், உலகளாவிய ரீதியில் வர்த்தகம் செய்வோர், தொழிற்சாலைகளில் வேலைசெய்வோர் ஆங்கில மொழி மூலமாகவே தமது தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படுகின்றது. இதற்கு TOEIC உதவுகின்றது.

TOEIC Bridge

TOEIC Bridge பரீட்சையானது ஆங்கிலத்தை அடிப்படையிலிருந்து கற்று அடிப்படை ஆங்கில புலமைத்திறனை பரீட்சிப்பதற்கான ஒரு பரீட்சையாகும். GCE(O/L), GCE(A/L) மாணவர்களுக்கு TOEIC Bridge ஒரு சிறந்த தேர்வு ஆகும்.



அண்மையில் TOEIC ஆங்கில தகமைகள் பரீட்சை யாழ்நகரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந் நிகழ்வுக்கு வருகை தந்த யாழ் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க மற்றும் பிரமுகர்களை TOEIC நிறுவன பிராந்திய முகாமையாளர் திரு.ஜெ.விவேகானந்தன், TOEIC நிறுவன இலங்கைக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.ஹக்கீக் அபுல் ஆகியோர் வரவேற்பதனை படத்தில் காணலாம்.



யாழ் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு.யோகராஜன், DFFC வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் திரு.ரவீந்திரா, Union assurance வடபிராந்திய முகாமையாளர் திரு.சுகுணன் மற்றும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்த யாழ் பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க மற்றும் கல்வியல் நிறுவன அதிகாரிகள், பிரமுகர்கள் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்

TOEIC கற்கை நெறிகள், பரீட்சைகள் சம்பந்தமான விபரங்களை யாழ்நகரில் அமைந்துள்ள TOEIC பரீட்சைகள்/ தகமைகளுக்கான இலங்கை பிரதிநிதியின் அலுவலகமான Knowledge Merchan dizing அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ் அலுவலகம் இல 19, 3வது மாடி, (மக்கள்வங்கி அமைந்துள்ள கட்டிடம்), தனராஜ கட்டிடத்தொகுதி, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணத்தில் அமைந்துள்ளது. மேலும் விபரங்களை அறிய 021-222 1864, 0777172660 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.


# அடுத்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்காவை சீனா தோற்கடிக்கும்

அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவை சீனா தோற்கடித்து விடும் என கட்டிடங்கள் குறித்த ஆய்வு அமைப்பான மோசியன் சிட்டி நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

தற்போது உலகிலேயே அதிக உயரங்கள் கொண்ட கட்டடங்கள் அமெரிக்காவில் தான் உள்ளன. இங்கு 152 மீற்றருக்கு மேற்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 533.

சீனாவில் இதன் எண்ணிக்கை 470 ஆக உள்ளது. ஆனால் 2017ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வானுயர்ந்த கட்டிடங்களின் எண்ணிக்கை 539 ஆக இருக்கும்.

அதே ஆண்டில் சீனாவில் இந்த அளவுக்கு உயரம் கொண்ட



கட்டடங்களின் எண்ணிக்கை 802 ஆக அதிகரிக்கும்.

அடுத்த 10 ஆண்டுகளில், சீனாவில் இந்த எண்ணிக்கை 1,318 ஆகவும், அமெரிக்காவில் 563 ஆகவும் இருக்கும் என்று தெரியவந்துள்ளது.

தற்போது சீனாவில் 332 வானுயர்ந்த கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், 516 கட்டிடங்கள் கட்டுமானப் பணிக்காக காத்திருக்கின்றன.

ஆனால் அமெரிக்காவில் 6 கட்டிடங்கள் மட்டுமே கட்டுமானத்தில் உள்ளன. மேலும், 24 கட்டிடங்கள் வரைபட அளவில் உள்ளன.

இதில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம், சீனாவின் பெரிய நகரங்களான ஷாங்காய், தலை நகர் பீஜிங் மட்டுமில்லாமல், 2ம் நிலை நகரங்களிலும் வானுயர்ந்த கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன என்பது தான்.

# உலக வெப்பமயமாதலின் எதிரொலி :10 கோடி பேர் உயிரிழக்க நேரிடும் அபாயம்

உலக வெப்பமயமாதல் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றால், 2030ஆம் ஆண்டுக்குள் உலகளவில் 10 கோடிக்கும் அதிகமானவர்கள் இறக்க நேரிடும் என்ற அதிர்ச்சி தகவல் தெரியவந்துள்ளது.

2010 மற்றும் 2030ஆம் ஆண்டில் வானிலை மாற்றத்தால் மனித இனம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து டாரா என்ற மனித இன நலம் சார்ந்த நிறுவனம் ஆய்வு நடத்தியது. அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுற்றுச்சூழலை மாசுப்படுத்தும் வாயுக்கள் அதிகளவில் வெளியிடப்படுவதால், உலகில் வெப்பநிலை அதிகரித்து வருகிறது, துருவப் பகுதிகளிலும் பனி உருகுகிறது. இதனால் வறட்சி, கடல் நீர்



மட்டம் உயர்தல் போன்ற அபாயங்கள் ஏற்படும். தற்போது காற்று மாசு, பசி, நோய் போன்றவற்றால் 50 இலட்சம் பேர் ஆண்டு தோறும் இறக்கின்றனர். பெட்ரோலியப் பொருட்களை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் 2030ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 60 லட்சமாக உயரும். இவர்களில் 90% பேர் வளரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். அடுத்த 10 ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 10 கோடி பேர் உயிரிழக்கக் கூடும். தொழிற்துறைகள் வளர்வதற்கு முன்பு இருந்ததை விட இப்போது 0.8 சத வீதம் அளவுக்கு வெப்பநிலை உயர்ந்துள்ளது. கடந்த 2010ஆம் ஆண்டு கேன்கன் சுற்றுச்சூழல் மாநாட்டின் போது, உலக வெப்பத்தை 2 சென்டிகிரேட் வரை குறைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள 200க்கும் மேற்பட்ட நாடுகள் ஒப்புக் கொண்டன. ஆனால், மாசு ஏற்படுத்தும் வாயுக்கள் அளவைப் பார்த்தால் 2 சென்டி கிரேட் வெப்பத்தை குறைப்பது கூட போதுமானதாக இருக்காது என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

# ஐஸ்லாந்திற்கு இடம்பெயர்கின்றது விக்கிலீக்ஸ்: அனைத்து நாடுகளின் இரகசியங்களை வெளியிட முடிவு

அமெரிக்கா தொடர்பான இரகசியங்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்திய விக்கிலீக்ஸ் இணையத்தளம், புதிய வடிவில் ஐஸ்லாந்திலிருந்து இயங்க உளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதுவரையிலும் அமெரிக்கா தொடர்பான தகவல்களுக்கே முக்கியத்துவம் அளித்து வந்த விக்கிலீக்ஸ், இனிமேல் உலக நாடுகள் முழுவதிலும் கவனம் செலுத்த போவதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.

ஊடகங்களின் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தும் புதிய சட்டமொன்று சமீபத்தில் ஐஸ்லாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதால், விக்கிலீக்ஸ் அங்கு இடம்பெற தீர்மானித்துள்ளது.

இந்த இணையத்தளத்தின் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே தற்சமயம் பாலியல் சர்ச்சை குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருப்பதால், பிரிட்டனில் உள்ள ஈக்வடோர் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

இதுநாள் வரையிலும் விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் தலைமை சுவீடனிலிருந்து இயங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

# ஹீனா- பிலாவல் காதல் உண்மையா?

பாகிஸ்தான் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹீனா ரப்பானிகருக்கும், அந்நாட்டு ஜனாதிபதி சர்தாரியின் மகன் பிலாவல் பூட்டோவுக்கும் இடையே காதல் என்று தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன.

இந்நிலையில் ஹீனா ரப்பானி யார் யாருக்கு எல்லாம் போன் செய்தார் என்ற விவரத்தை கேட்டு அவரது கணவர் பாகிஸ்தான் மத்திய புலனாய்வுத் துறையை அணுகியுள்ளார் என்று புது தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் வங்கதேச பத்திரிக்கை ஒன்று இந்த விவகாரம் குறித்து நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டது.

தன்னைவிட கிட்டத்தட்ட 11 வயது குறைவான(நவம்பரில் அவருக்கு வயது 35) பிலாவலை அவர் காதலிக்கிறார் என்று கூறப்படுகிறது.

மேலும் அவர்கள் இருவரும் பாகிஸ்தானை விட்டு வெளியேறி சுவிட்சர்லாந்தில் செட்டிலாக முடிவு செய்துள்ளனராம்.

இது குறித்து அறிந்த ஸர்தாரி ஏற்கனவே திருமணமாகி 2 குழந்தைகளுக்கு தாயான ஹீனாவை மணக்கக் கூடாது என்று தனது மகனைக் கண்டித்துள்ளாராம். அதற்கு பிலாவல் மணந்தால் ஹீனாவைத் தான் மணப்பேன் என்று கூறியுள்ளாராம்.

ஹீனாவை பிலாவல் மணந்தால் அவரது அரசியல் வாழ்க்கை அடியாகிவிடுமே என்ற கவலையில் ஸர்தாரி உள்ளார் என்று அந்த பத்திரிக்கை செய்தி வெளியிட்டது. இந்த செய்தி உண்மையா, பொய்யா என்று பலரும் குழம்பிய நிலையில் புதிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

அதாவது ஹீனாவின் தொழிலதிபர் கணவரான பிரோஸ் குல்சார் தனது மனைவி யார், யாருக்கு போன் செய்து பேசுகிறார் என்ற தகவலைக் கேட்டு மத்திய புலனாய்வுத் துறையின் உதவியை நாடியுள்ளாராம்.

அதிலும் குறிப்பாக ஹீனா போன் செய்யும் இரண்டு எண்கள் யாருடையது என்று தெரிந்து கொள்ள அவர் விரும்புகிறாராம்.

இதன் மூலம் ஹீனா- பிலாவல் காதல் வதந்தி அல்ல என்று பலரும் பேச ஆரம்பித்துள்ளனர்.

# உலக பார்வை

## ஐபோன்களை தீயில் போட்டு கொளுத்துங்கள்

### யூதர்களுக்கு மத குரு உத்தரவு

யூதர்கள் யாரும் ஐபோன்களை வாங்க வேண்டாம், அப்படி வாங்கியிருந்தால் அதை தீயில் போட்டு கொளுத்தி விடுங்கள் என இஸ்ரேலிய மத குரு ஒருவர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக யூத மதத்தின் பழமைவாத பிரிவைச் சேர்ந்த மத குரு ரபி சயிம் கனிவெஸ்கி என்பவர் யூத நாளிதழான யாதேத் நீமன் என்ற நாளிதழில் வெளியிட்டுள்ள செய்தியில், அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் கள் யூத மதக் கோட்பாடுகளை மீறுவதாக உள்ளது.

மேலும் தொலைக்காட்சி, கணனி போன்ற எதையுமே பயன்படுத்த கூடாது என்றும் தெரிவித்துள்ளார்.



யூத மதத்தின் புனித மாதம் தொடங்கியுள்ள நிலையில், இந்த கட்டளையை மத குரு

பிறப் பித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் ஸ்பெயின் நாட்டில், நிலைமையை சமாளிக்க அரசு, வரி உயர்வு மற்றும் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதைக் கண்டித்து ஏராளமானவர்கள், தலைநகர் மாட்ரிட்டில், நாடாளுமன்றம் நோக்கி பேரணி நடத்தினர்.

## ஸ்பெயினில் அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்: பொலிசார் துப்பாக்கி சூடு



ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயினில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுவதால், மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றது.

ஸ்பெயினில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதற்கு அந்நாட்டு ரியல் எஸ்டேட் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணம் என்று கருதப்படுகிறது.

இந்த நெருக்கடி காரணமாக லட்சக்கணக்கானோர் வேலையிழந்து தவிக்கின்றனர், ஏராளமான குடும்பங்கள் ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இதனையடுத்து அரசை கண்டித்து நேற்று முன்தினம் தலைநகர் மாட்ரிட்டில் நாடாளுமன்றத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நிதிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்படும் சம்பளக் குறைப்புகள் மற்றும் விற்பனை வரி அதிகரிப்பு உட்பட அரசின் கொள்கைகள், ஏழை மக்களைக் கடுமையாக பாதித்துள்ளன என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஸ்பெயினின் வங்கிகளுக்கு 100 பில்லியன் யூரோ நிதியுதவி தருவதாக ஐரோப்பிய நாடுகள் அறிவித்திருப்பது அவர்களின் கோபத்தை அதிகரித்துள்ளது.

இதை கண்டித்தும், அரசை கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் “வெட்கம்”, “பதவி விலகு” என்பவை உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டனர்.

நாடாளுமன்ற கட்டிடத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள உலோகத் தடுப்புகளை உடைக்க சிலர் முயன்றனர்.

இதையடுத்து அவர்களை விரட்டிச் சென்ற பொலிசார் தடி யடி நடத்தி, சிலரை வானில் ஏற்றினர்.

அவர்கள் மீது பொலிசார் ரப்பர் தோட்டாக்களால் சுட்டனர். இதில் 14 பேர் காயமடைந்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இந்திய செய்திகள்

## தைரியம் இருந்தால் என்னை கொலை செய்யட்டும்: தீவிரவாதிகளுக்கு காஷ்மீர் முதல்வர் சவால்



தைரியம் இருந்தால் எனது உயிருக்கு தீவிரவாதிகள் குறி வைக்கட்டும் என்று காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா கூறினார்.

ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்தனர்.

இந்த மிரட்டலைத் தொடர்ந்து கடந்த சில தினங்களுக்கு முன்பு பஞ்சாயத்து உறுப்பினர் ஒருவர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து காஷ்மீரின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இராஜினாமா செய்யத் தொடங்கி உள்ளனர். நேற்று முன்தினம் மட்டும் 50 உறுப்பினர்கள் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர்.

இது தொடர்பாக காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, பஞ்சாயத்து தலைவர்கள், உறுப்பினர்களுக்கு தீவிரவாதிகள் குறித்து வைத்துள்ளது கோழைத்தனமானது என்றார்.

அவர்களுக்கு தைரியம் இருந்தால் என் உயிருக்கு குறிவைக்கட்டும் என்று கூறிய உமர், தீவிரவாதிகளுக்கு தக்க பதிலடி தரப்படும் எனவும் எச்சரித்தார்.

## கூடங்குளம் அணு உலைக்கெதிராக மண்ணுக்குள் புதைந்து போராடினார் வைகோ



கூடங்குளம் அணு உலைக்கு எதிராக பொது மக்களுடன் மதிமுக தலைவர் வைகோவும் நேற்று மண்ணுக்குள் புதைந்தபடி போராட்டம் நடத்தினார்.

நேற்று முன்தினம் இடிந்தகரை சர்ச் வளாகத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் வைகோ கலந்து கொண்டார். அங்கிருந்து மக்களு [illegible] ஊர்வ லமாக கடற்கரை சென்று உடலை மண்ணில் புதைத்து போராட்டம் நடத்தினார்.

அவருடன் கூடங்குளம் போராட்டக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், புஷ்பராயன் உள்ளிட்டோரும் மண்ணில் புதைந்து போராட்டம் நடத்தினர். பின்னர் அவர்கள் கடலில் குளித்து போரட்டத்தை முடித்தனர்.

இப்போராட்டம் குறித்து வைகோ பேசுகையில், இடிந்தகரை மக்களுக்கு ஆதரவு தரும் அனைத்து கட்சிகளும் அங்கிருந்துகொண்டு கருத்துக்களை கூறக்கூடாது.

போராட்ட களத்திற்கு வந்து மக்களை நேரடியாக சந்தித்து அனைவரும் ஒன்று சேர்ந்து அணு உலைக்கு எதிரான கருத்துக்களை நிலை நாட்ட வேண்டும் என்றார்.

வரும் நவம்பர் 24ம் திகதி தூத்துக்குடியில் மீனவர் வாழ்வு ரிமை மாநாடு நடத்தவுள்ளோம்.

டிசம்பர் 12ம் திகதி மது ஒழிப்பு பேரணி உவரியிலிருந்து சென்னை வரை நடத்தப்படுகிறது என்றார்.

## பூலான்தேவி கணவர் காங் கட்சியில் இருந்து நீக்கம்

கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்கு அப்பாற்பட்டு செயல்பட்டு வந்ததாக பூலான் தேவி கணவர் உம்மத்நிஷாத் காங்., கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் உ.பி., மாநிலத்தை களங்கடித்த கொள்ளைக்காரியாக திகழ்ந்த பூலான் தேவி பின்னர் அரசியல் வாதியாக மாறினார். பின்னர் மர்ம நபர்களால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இந் நிலையில் அவரது கணவர் நிஷாத் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக இருந்து வந்தார்.

தற்போது கட்சியின் ஒழுங்கு விதிகளுக்கு அப்பாற்பட்டு செயல்பட்டு வந்த தாக கூறி கட்சியில் இருந்து நீக் கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் கட்சியின் ஒழுங்கு முறை கமிட்டி யின் தலைவர் கூறியுள்ளார். இந் நிலையில் வரும் 2014-ம் ஆண்டு நடைபெற பார்லிமெண்ட் தேர்த லில் பகுஜன் சமாஜ் கட்சி சார் பில் ஷாஜகான் பூர் தொகுதியில் நிஷாத் போட்டியிடுவார் என அக்கட்சியின் தலைவர் மாயாவதி அறிவித்துள்ளார்.

## கிங்பிஷர் விமான நிறுவனத்தை காப்பற்ற போராடும் விஜய் மல்லையா



நாட்டின் தனியார் விமான நிறுவனமான கிங்பிஷர், தற்போது வெறும் 7 விமானங்களுடன் மட்டுமே இயங்கி வருகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 66 விமானங்களுடனும், உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு என சுமார் 374 சேவைகளுடனும் கிங்பிஷர் ஏர்லைன்ஸ் நிறுவனம் இயங்கியது.

ஆனால் தற்போது வெறும் 7 விமானங்களுடன் மட்டுமே தனது சேவையை இயக்கி வருகிறது.

கிங்பிஷர் நிறுவனத்திற்கு ஸ்டேட் வங்கி வழங்கிய 'ரூ.8 ஆயிரம் கோடி கடன் இதுவரை திருப்பிச் செலுத்தப்படவில்லை.

கிங்பிஷர் நிறுவனத்திற்கு மற்ற விமான நிறுவனங்கள் குத்தகைக்கு வழங்கிய விமானங்களையும் அந்த நிறுவனங்கள் திரும்ப பெற்று விட்டன. இந்நிலையில், விமானப் போக்குவரத்துத்துறையில் அன்னிய முதலீட்டை மத்திய அரசு அனுமதியளித்துள்ள நிலையில், நிறுவனத்தை காப்பாற்ற வெளிநாட்டு விமான நிறுவனங்களுடன் கிங்பிஷர் நிறுவனர் விஜய் மல்லையா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.



மும்பையில் நடைபெற்ற ரி.வி ரியாலிட்டி நிகழ்ச்சியில் பங்கேற்று நடனமாடிய ஸ்ரீதேவி மற்றும் மாதுரி தீட்சித்.

## ஐ.நா. தோல்வியின் அடையாளம் தான் காஷ்மீர்: ஸர்தாரி



ஐ.நா.வின் மிகப் பெரிய தோல்வியின் அடையாளம் தான் காஷ்மீர் என பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அல் ஸர்தாரி தெரிவித்துள்ளார்.


ஐக்கிய நாடுகள் சபையின் 67-வது பொதுக் கூட்டம் நியூயார்க்கில் நடந்து வருகிறது.

இதில் கலந்து கொண்டு பேசிய பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி ஸர்தாரி, காஷ்மீர் பிரச்னை குறித்த ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானங்கள் நிலுவையில் உள்ளன.

ஐ.நா.வின் தோல்வியின் அடையாளமாக கா'மீர் உள்ளது. இந்தியா- பாகிஸ்தான் நாட்டு தலைவர்களுக்கு இடையிலான தொடர்புகள் விரிவடைந்துள்ளது.

நான், இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கை கடந்த 4 ஆண்டுகளில் 5 முறை சந்தித்து பேசியுள்ளேன். இந்தியாவுடன் எங்கள் உறவு மேம்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## பிரதிபாவை விடாது துரத்தும் சர்ச்சை: பரிசுப் பொருட்களை ஒப்படைக்க கெடு




பிரதிபா பாட்டீல், ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்ற தும், ஜனாதிபதி மாளிகை யிலிருந்து, தன் சொந்த ஊருக்கு, லாரிகளில் அள்ளிச் சென்ற பரிசுப் பொருட்களை, அடுத்தாண்டு ஜனவரி, 13ம் திகதிக்குள், திரும்ப ஒப்படைக்க வேண்டும் என, உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, தகவல் வெளியாகியுள்ளது.

பிரிக்க முடியாதது எதுவோ என, யாராவது கேள்வி எழுப்பினால், பிரதிபாவும், சர்ச்சைகளும் என, சற்றும் யோசிக்காமல், பளீச் என, உடனடியாக பதில் அளிக்கலாம். அந்த அளவுக்கு, சர்ச்சைகளுடன், ஒன்றி விட்டார், முன்னாள் ஜனாதிபதி பிரதிபா. இவர், ஜனாதிபதியாக பதவி வகிக்கும் போதே, ஏராளமான சர்ச்சைகள் எழுந்தன. இவரது, ஐந்தாண்டு பதவி காலத்தில், 22 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்தார். இதற்காக, மக்களின் வரிப் பணம், 205 கோடி 'ரூபாய் செலவிடப்பட்டது.

இது, இதற்கு முந்தைய ஜனாதிபதிகள் செய்யாத சாதனை (?). இதுகுறித்து, மீடியாக்களில் செய்திகள் வெளியானபோது, இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் இடையே, உறவை வளர்க்கும் வகையில், நல்லெண்ண பயணமாக, வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். இதில் என்ன தவறு உள்ளது என, பிரதிபா தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, ஜனாதிபதி பதவியிலிருந்து, அவர் ஓய்வு பெற்று, தன் சொந்த ஊரான, மகாரா'டிர மாநிலம், அமராவதியில் வசிக்கிறார்.

ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும், சர்ச்சையிலிருந்து, இவர், அவ்வளவு சீக்கிரம், ஓய்வு பெற முடியாது போல் தெரிகிறது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், மனுக்களை தாக்கல் செய்து, பல உண்மைகளை, உலகின் வெளிச்சத்துக்கு கொண்டு வரும், சமூக ஆர்வலர் சுபா' அகர்வால் என்பவர், சமீபத்தில் ஒரு மனு தாக்கல் செய்திருந்தார். அதில், பிரதிபா பாட்டீல், ஜனாதிபதியாக இருந்தபோது, அவருக்கு ஏராளமான பரிசுகள் கிடைத்திருக்கும். அந்த பரிசுகள், தற்போது எங்கு உள்ளன என, கேட்கப்பட்டிருந்தது. பொதுவாக, ஜனாதிபதி போன்ற, உயர்ந்த அரசுப் பதவிகளில் இருப்பவர்கள், பதவிக் காலத்தில், தங்களுக்கு கிடைக்கும் பரிசுகளை, அரசின் வசம் ஒப்படைக்க வேண்டும் என்பது, மரபு. இதன் அடிப்படையில் தான், சுபா' அகர்வால், இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.



# இலங்கைக்கு சுப்பர் 8இல் சுப்பர் வெற்றி

உலககோப்பை ருவென்ரி-20ல் சூப்பர் 8 சுற்றின், நேற்றைய பரபரப்பான போட்டியில் சூப்பர் ஓவர் மூலம் இலங்கை வெற்றி பெற்றது.

முன்னதாக டாஸ் வென்ற நியூசிலாந்து அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதனையடுத்து அந்த அணி முதலில் களமிறங்கியது.

20 ஓவர்களின் முடிவில் நியூ சிலாந்து அணி 7 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது. 175 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய இலங்கை அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது. இரு அணிகளும் சம ரன்களை ஓட்டங்களைப் பெற்றதால், சூப்பர் ஓவர் வீச தீர் மானிக்கப்பட்டது.

இதனையடுத்து சூப்பர் ஓவரில் முதலில் களமிறங்கிய இலங்கை அணி 6 பந்துகளில், 1 விக் கெட் இழப்பிற்கு 13 ஓட்டங்களை் எடுத்தது.

பின்னர் ஆடிய நியூசிலாந்து அணி சூப்பர் ஓவரில் 2 விக்கெட்டுகளை இழந்து 7 ஓட்டங்களை மட்டுமே எடுத்து தோல்வியுற்றது.

# வீழ்ந்தது யாழ்ப்பா... அடுத்த சுற்றுக்கு மகாஜனா தெ...



தெல்லிப்பழை

17 வயதுப் பிரிவிற்குரிய கிரிக்கட் சுற்றுப் போட்டியின் இரண்... சுற்றின் இரண்டாவது ஆட்டம் மகாஜனக்கல்லூரிக்கும் வ... கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் மகாஜனக் கல்... மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக்கல்லூ... ஓவர்களில் அனைத்துவிக்கெட்டுக்களையும் இழந்து 199 ஓ... களைப்பெற்றது. துடுப்பாட்டத்தில் நிசாந்தன் 54 ஓட்டங்களை... ஜனந்தன் 35 ஓட்டங்களையும் ரசிகரன் 31 ஓட்டங்களையும் ...னர்.

பந்துவீச்சில் ரவிவர்மன் 49 ஓட்டங்களைக்கொடுத்து 3 விக்கெ...யும் பிரவிந்த் 17 ஓட்டங்களைக்கொடுத்து 2 விக்கெட்டையும் கை...றினர்.

200 ஓட்டங்களை வெற்றியிலக்காக கொண்டு துடுப்பெடுத்... யாழ்ப்பாணக்கல்லூரி 36 ஓவர்களில் அனைத்துவிக்கெட்டுக்க... இழந்து 123 ஓட்டங்களைமாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் ... ராஜ் 17, கீர்த்தனன் 14, விபீஸ் 14 ஓட்டங்களைப்பெற்றனர். பந்... சில் கஜந்தன் 24 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கெட்டையும், ... சாந்த் 13 ஓட்டங்களைக்கொடுத்து 2 விக்கெட்டையும் கைப்பற்றி...

யாழ்ப்பாணக்கல்லூரியை 73 ஓட்டங்களால் வெற்றிகொண்ட ம...னக்கல்லூரி மூன்றாம் சுற்றுக்கு தகுதிபெற்றதோடு மூன்றாம் சு... கின்னியா மத்தியமகா வித்தியாலயத்துடன் பலப்பரீட்சை நட...வுள்ளது.


# இந்தியா தோல்வி

ருவென்ரி-20 மகளிர் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா அணியிடம், 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி தோற்றது. காலியில் நடைபெற்ற போட்டியில்,முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 8 விக்கெட் இழப்பிற்கு 104 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

பின்னர் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, 17.2 ஓவர்களில் 105 ஓட்டகளை எடுத்து வெற்றி பெற்றது.அவுஸ்திரேலியா தரப்பில் லேன்னிங் 39 ஓட்டமும், கமரூன் 36 ஓட்டமும், ஹீலி 21 ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு அடித்தளமாக செயற்பட்டனர்.



# இந்திய அணிக்கு புதிய தேர்வாளர்



இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தெரிவு குழு தலைவராக சந்தீப் பாட்டீல் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் அதிக சர்ச்சையை கிளப்பிய மொஹிந்தர் அமர்நாத் தெரிவு குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவு குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் மற்றும் உறுப்பினர்கள் ஹிர்வானி, சுரேந்திர பாவே, ராஜா வெங்கட் ஆகியோரின் 4 ஆண்டு பதவிக்காலம் இந்த மாதத்துடன் முடிவடைகிறது.

இதனால் இந்திய அணியின் புதிய தெரிவு குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களை தெரிவு செய்யும் வகையில், இன்று மும்பையில் பிசிசிஐயின் ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இதில் முன்னாள் இந்திய வீரர்கள் இடையே தெரிவு குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்காக கடும் போட்டி நிலவியது.

இந்நிலையில் பொதுக்குழு கூட்டத்தின் முடிவில் கடந்த 1983ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை வென்ற இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் சந்தீப் பாட்டீல், புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் வடக்கு மண்டலத்தில் விக்ரம் ராத்தோரும், கிழக்கு மண்டலத்தில் சபா கரீம், மத்திய மண்டலத்தில் ராஜிந்தர் சிங் ஹன்ஸ் மற்றும் தெற்கு மண்டலத்தில் ரோஜர் பின்னி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய தேர்வுக் குழு உறுப்பினர்களின் சம்பளமும், ஆண்டிற்கு ரூ.40 லட்சத்தில் இருந்து ரூ.60 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சந்தீப் பாட்டீல் ஏற்கனவே இந்தியா, கென்யா, ஓமன் ஆகிய அணிகளுக்கு பயிற்சியாளராக பணியாற்றி உள்ளார்.

தற்போது பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அகடமியின் இயக்குனராக சந்தீப் பாட்டீல் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணிக்கு ரஷா... தேவை-முன்னாள் வீரர்க...



பாகிஸ்தான் அணியில் அவ்வணியின் சகலதுறை வீரர் அப்துல் ரஷாக்கைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாகிஸ்தான் அணி யின் 15 பேர் கொண்ட அணியில் ரஷாக் இடம் பெற்றுள்ள போதிலும், இதுவரை இரண்டு போட்டிகளிலும் அவர் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் அணியின் முன்னாள் அதிவேகப் பந்துவீச... சொய்ப் அக்தர், தடுமாறிவரும் வேகப்பந்து வீச்சாளர் சொ... தன்வீருக்குப் பதிலாக அப்துல் ரஷாக் அணியில் சேர்க்க... வேண்டும் எனத் தெரிவித்தார். தடு மாறிவரும் பாகிஸ்தா... வேகப்பந்து வீச்சுத் தடுமாற்றங்களைக் குறைக்கவே அவர் இவ்வ... தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி குழுநிலையில் தான் பங்குபற்றிய இரண்டு போ...டிகளிலும் வெற்றிபெற்றுள்ள போதிலும் பாகிஸ்தான் அணியின் வே... பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருக்கவில்லை.

உமர் குல் லும், சொஹைல் தன்வீரும் விக்கெட்டுக்களை அ...ளவில் கைப்பற்றத் தவறியதோடு, ஓட்டங்களையும் அதிகமாக வி... கொடுத்திருந்தனர்.

# இலங்கை, நியூசிலாந்துப் போட்டி இன்று

உலக டுவென்டி டுவென்டி தொடரில் சுப்பர் தொடரின் முதற போட்டி இன்று இடம்பெறவுள்ளது.

இன்று இடம்பெறவுள்ள இரண்டு போட்டிகளின் முதற்போட்டியாக இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன.

பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டி இன்று மாலை 3.30 இற்கு ஆரம்பிக்கவுள்ளது.

மறுபுறத்தில் நியூசிலாந்து அணி பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக் கொண்டதுடன், பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் போராடி தோல்வியடைந்திருந்தது.

இலங்கை அணி தனது குழு நிலைப் போட்டிகள் இரண்டையும் ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் விளையாடியிருந்த அதேவேளை, நியூசிலாந்து அணி தனது குழுநிலைப் போட்டிகள் இரண்டையும் பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் விளையாடியிருந்தது.இன்றைய தினத்தில் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான அஜந்த மென்டிஸ் தனது உடல் உபாதையிலிருந்து குணமடை வாராயின் பங்குபற்றுவார்.


நியூசிலாந்து அணி சார்பாக கடந்த போட்டியில் உடல் உபாதை காரணமாக விளையாடியிருக்காத ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் மார்ட்டின் கப்ரில் இன்றைய தினம் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஹர்பஜன் சிங்கைச் சிறப்பாகக் கையாளுவோம்:ஹ...

இந்தியாவிற்கெதிரான சுப்பர் 8 போட்டியில் இந்திய அணியின் அனுபவச் சுழற்பந்து வீச்சாளரான ஹர்பஜன் சிங்கைச் சிறப்பாகக் கையாள எதிர்பார்ப்பதாக அவுஸ்திரேலிய அணியின் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியில் நீண்டகாலமாகப் போட்டிகளில் பங்குபற்றியிருக்காத ஹர்பஜன் சிங், இங்கிலாந்திற்கெதிரான போட்டியில் பங்குபற்றியதோடு 4 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தார். அவரின் பந்துவீச்சில் உதவியோடு நடப்பு சம்பியன்களான இங்கிலாந்து அணியை இந்திய அணி இலகுவாக வெற்றிகொண்டிருந்தது.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மைக்கல் ஹசி, ஹர்பஜன் சிங் ஓர் அனுபவ வீரர் என்பதால் ஹர்பஜன் சிங்கின் உள்ளடக்கம் இந்திய அணிக்கு பலத்தையே வழங்கும் எனத் தெரிவித்தார். ஹர்பஜன் சிங்கைத் தாங்கள் ஒரு வீரராக மதிப்பதாகவும், எனினும் டுவென்டி டுவென்டி போட்டி களில் பங்குபற்றும் போது அடித்தாட வேண்டிய தேவை யுள்ளதாகவும் தெரிவித்தார்.



இந்தியாவிற்கெதிரான போட்டியில் பங்கபற்றும் போது அவரை ஆரம்பத்தி லேயே அடித்தாடி அவரை அழுத்தத்திற்குள்ளாக்க முயற்சிக்கப் போவதாகத் தெரி... மைக்கல் ஹசி, இங்கிலாந்திற்கெதிரான போட்... ஹர்பஜன் சிங் மிகச்சிறப்பாகப் பந்து வீசியி...தாகத் தெரிவித்தார்.எனினும் இங்கிலாந்தை விடத்...கள் சிறப்பாக அவரைக் கையாளுவோம் என்ற...பிக்கையுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இன்.ஃ.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 28.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது